
# இந்து தீபம்

## 2006



இந்து மன்றம்
கொழும்பு பல்கலைக்கழகம்



பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே !

*– திருஞானசம்பந்தர் –*

# இந்து மன்றம்

கொழும்பு பல்கலைக்கழகம்
அரங்கேற்றம்

## "கலைவிழா 2006"


பிரதம அதிதி : ஏ. ஆர். சுரேந்திரன்
(ஜனாதிபதி சட்டத்தரணி)

கௌரவ அதிதி: சு. கனகநாதன்
(பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்
வவுனியா வளாகம்
யாழ் பல்கலைக்கழகம்)

12.08.2006

பிஷப் கல்லூரி அரங்கம்

# சமர்ப்பணம்



நினைவுகளால் எம்மை நெகிழ்த்தி

நினைக்காத ஒரு நொடியில்

நிழலாகி எம் நெஞ்சில்

நீங்காத இடம் பிடித்து

கொழும்பு பல்கலைக்கழக

இந்து மன்றத்தை புத்துயிரூட்டி புதுப்பித்த

அமரர் கு. விஜயாலயன் அவர்களுக்கு

இவ்விதழ் சமர்ப்பணம்

# HINDU SOCIETY
# UNIVERSITY OF COLOMBO

OFFICE BEARERS 2005/2006

| | | |
|---|---|---|
| **Patron** | : | Vice Chancellor<br>University of Colombo |
| **Senior Treasurer** | : | Mr. R. Sri Kanthan |
| **President** | : | Mr. S. Pravinsangar |
| **Vice Presidents** | : | Mr. N. E. Kesavan |
| | | Mr. K. Kugaraj |
| **Joint Secretaries** | : | Mr. V. Anushan |
| | | Mr. T. Suthagar |
| **Treasurer** | : | Mr. R. Thanigaivasan |
| **Editor** | : | Mr. N. Jeyapragash |
| **Sub-editors** | : | Mr. S. Kalaichelvan |
| | | Mr. Sritharan |
| **Committee Members** | : | Miss. T. Niranthari<br>Mr. R. Robetkumar<br>Miss. K. Thadshayini<br>Miss K. Niranjani<br>Mr. N. Agilan<br>Mr. B. Karthic<br>Mr. S. Devapalan<br>Mr. S. Herosankumar<br>Mr. S. Shyanth<br>Mr. T. Kesavan |

# பணிவுடையன் இன்சொலன்



''நாள் என ஒன்று போற் காட்டி உயிர் இரும் வாள்'' நண்பன் விஜயாலயனை இவ்வளவு சீக்கிரமாக எடுத்துச் சென்றதை எண்ணும் பொழுது என்ன எழுதுவது என அறியாமல் ஏங்கி நிற்கின்றோம்.

''தேடிச் சோறு நிதந்தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, மனம் வாடி துன்பம் மிகப் பல உழன்று, பிறர் வாழ பல செயல்கள் செய்து நரை கூடி கிழப்பருவம் எய்தி, கொடுங்கூற்றுக்கு இரையென பின் மாயும், பல வேடிக்கை மனிதர்களை போலே'' அல்லாமல் பட்டுப்போக இருந்த ஒரு பயிரை பராமரித்து, நீர் வார்த்து, ஒரு விருட்சமாக அதை விஸ்வரூபம் பெறச் செய்து இன்று விதையாகவே வீழ்ந்திருக்கிறார் விஜயாலயன்.

கண்ணீர் விட்டு அவரும் நண்பர்களும் கருகாமல் காத்து தந்தது கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றம். பல்லாண்டு காலம் இயங்காமல் இருந்த இந்த அமைப்பை புத்துயிரூட்டி 1993 ஆம் ஆண்டு புதுப்பித்ததோடு அதன் தலைவராகவும் இருந்து வழிநடத்தி கொழும்பு நகரிலேயே மிகப் பெரிய இந்து எழுச்சியாக சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டைக் கொண்டாடும் விவேகானந்தர் விழாவை வெற்றிகரமாக நடத்தியவர் நண்பர் விஜயாலயன்.

அத்தோடு நின்றுவிடாது இந்து மன்றத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் யாவற்றையும் புன்னகை மாறாத முகத்தோடு முன்னின்று உழைத்தவர். பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய பின்னும் கூட இந்து மன்ற செயற்பாடுகளில் ஈடுபாட்டோடு இயங்கி வந்த இவரை பல வருடங்கள் இளைய மாணவர்கள் கூட ''விஜயாலயன் அண்ணா'' என்று அன்பும், உரிமையும் பற்றி அழைத்து அவர் சொல்லை மதித்து நடந்து வந்தது,. கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தின் பிதாமகர் இவரே என்பதை என்றும் பறைசாற்றி நிற்கும். பணிவுடையன் இன்சொலனாக என்றும் பவனி வந்தவர். சிறியன சிந்தியாத ஒரு பெரும் மனிதன். வளாகத்திற்குள் இந்துவாக நாங்கள் வாழ வழிசமைத்து, காலத்தின் கைகளிலிருந்து எமது மன்றை காப்பாற்றித் தந்தவர் இன்று காலத்தின் கைகளில்.

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் அவர் வழி வையத்துள் வாழ்வாங்கு வாழப் பழகுவோம். அன்றறிவாம் என்னாது அவர் செய்த அறம் பொன்றாத் துணையாய் நின்று கையறு நிலையில் இருக்கும் குடும்பத்தாரை காக்கும்.

**பழைய மாணவர்**
**இந்து மன்றம்**

## *Message from the Vice - Chancellor*

It is with much pleasure that I send this message to the souvenir published on the annual religious event of "Kalai Visha 2006" organized by the Hindu Society of University of Colombo.

The University of Colombo is a reservoir of talents and it is the University where unity in diversity is exhibited. It is heartening to see that our undergraduates engaged in meaningful activities to harness their creativity while pursuing their higher education. I earnestly believe that, events of this nature, will contribute immensely in preserving Hindu cultural values and practices.

While expressing my gratitude to the sponsors, well-wishers and the staff who encouraged them to make the event a success, I wish the society every success in its activities and also wish this event an enjoyable and a successful one. I hope this endeavour will be strengthened, sustained and developed in the years to come.

Professor T. Hettiarachchy Vice-Chancellor

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற விழாவுக்கும் அதனோடு ஒட்டிய சஞ்சிகைக்கும் வெளியீட்டு நிகழ்வுக்கும் எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேரானந்தமடைகின்றேன்.

திருமந்திரத்தை நமக்கருளிச் செய்த திருமூல நாயனாரினால் இலங்கைக்கு ''சிவபூமி'' என்று பெயரும் வழங்கப்பெற்றுள்ளது. இவ்வாறு சிவபூமியான இம்மண்ணின் மகத்துவத்தை காத்து நின்று இந்துக்களாக நமமவரை என்றும் காணவேண்டும் என்கின்ற பேரவாவுடன் கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றம் ஆற்றிவரும பல சமயப் பணிகளையும், சமூகத், தொண்டுகளையும இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இம்மன்றம் வருடந்தோறும் சிவராத்திரி விழாவின்போது இலங்கையின் பாடல் பெற்ற ஈஸ்வரங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட மேலும் பல திருத்தலங்களுக்கு திருத்தல யாத்திரை மேற்கொள்வதை அதன் மன்ற பணிகளில் ஒன்றாக செயற்படுத்தி வருகிறது. அத்தோடு சிவனின் தேவிக்கே உரித்தான நவராத்திரி விழாவையும் வெகு சிறப்பாக கொண்டாடி வருகிறது.

இம்மன்றத்தினால், வருடந்தோறும் அனாதை இல்லங் களுக்குச் சென்று அவர்களுக்கு உணவு வழங்கி ஒரு முழு நாளை அவர்களுடன் பகிர்ந்து கொண்டு ஆற்றுகின்ற பணியானது நாவலர்கால ''கஞ்சித்தொட்டி தரமம்'' என்கின்ற அளப்பரிய பணியை நினைவூட்டுகிறது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையையும் ஒவ்வொரு வருடமும் இவர்கள் கொண்டாடி வருவது தமிழர்களாகிய எம்மை பெருமை கொள்ள வைக்கிறது.

'இந்துவாக வாழ்வோம்
இந்து தர்மம் காப்போம்''

என்கின்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க அவர் வழி நின்று அவர் அடிபற்றி கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் தொடர்ந்தும் தனது சமய, சமூகப் பணிகளை நம்மவர்க்கு ஆற்றி நிற்கும் என்கின்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. இம்மன்றத்தின் பணிகள் மேன்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாவிப்பாராக.

**A.R. Surendran, LL.M. (Brussels)**
***President Counsel***

# சுடர் ஏற்றியவர்களிடமிருந்து

***எம் தீப ஒளியில் நனைவதற்கு முன்***

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தின் கலைவிழா 2006 நிகழ்வினில் இணைந்துகொண்டிருக்கும் உங்கள் கரங்களில் இந்து தீபம் 2006 இனை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

கல்வியோடு கலைகளும் கற்று, அன்பு நெறி தழைத்தோங்க, கலாச்சார பண்பாட்டின் உறுதியான பின்னணியில் உலகை வெற்றிகொள்ளும் மாணவர்களை உருவாக்கி, அவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதே இந்து மன்றத்தின் நோக்கமாகும்.

எம் மாணவர்களின் திறமைகளையும், ஆக்கபூர்வ முயற்சிகளையும், சமூகத்தின் அறிவு வேட்கைக்கு விருந்தாகும் ஆக்கங்களையும் தொகுத்து உங்கள் சிந்தைக்கு விருந்தாக்குவதே இந்து தீபத்தின் சிறப்பாகும்.

இடையில் ஏற்பட்ட பெருந்தடையை தாண்டி, ஒளி குன்றாது சுடர்விடும் எமது இந்து தீபத்தின் திரியை மீண்டும் தூண்டிவிட்டு திக்கெட்டும் அதன் ஒளிபரவ கரம் தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தீபத்திரியில் தோன்றும் ஒளியில் குறைகள் இருப்பின் பொறுத்தருள்வீர்கள் என நம்புகின்றோம்.

– மலர் வெளியீட்டுக் குழு –

***சி. கலைச்செல்வன் (துணை இதழாசிரியர்)***
***இ. ஜேனுகா***
***ஸ்ரீ. தஷந்தி நிரேகா***

# கொழும்பு பல்கலைக்கழக
# இந்து மன்ற பெரும் பொருளாளரின் ஆசிச்செய்தி

கொழும்பு பல்கலைக்கழக இந்து சங்கம் ஏறக்குறைய நான்கு தசாப்த கால வரலாறு கொண்டது. எனினும் இடைக்காலங்களில் ஒரு சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அதன் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டிருந்த போதிலும் பெரும்பாலும் கடந்த இரு தசாப்தங்களாக அது தன் நோக்கத்திற்கு இசைவாக பல செயற் பாடுகளை ஆற்றி வருகின்றது எனலாம்.

கடந்த மூன்று வருடங்களாக அதன் பெரும் பொருளாளன் என்ற வகையில் அதன் தனித்துவத்தினையும் இயலளவினையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. சமயரீதியான கொண்டாட்டங்களுடன் தொடர்பான சமயச்சடங்குகள், வழிபாடுகள் என்பனவற்றுடன் மட்டும் தனது தொழிற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ளாது மாணவப் பருவத்தில் உள்ளவர் களிடையே சமய அறிவில் தெளிவு, விழிப்புணர்வு என்பனவற்றை மேம்படுத்தும் முகமாக அவ்வப்பொழுது அகில இலங்கை ரீதியாக பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் மனனப் போட்டிகள் இசைப்போட்டிகள் என்பனவற்றையும் எமது மன்றம் ஒழுங்கு நெறிப்படுத்தி வருகின்றது. சிவராத்திரி, நவராத்திரி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சைவசமய தினங்களின் மகிமையினை எடுத்துக்காட்டும் முகமாக தலயாத்திரைகள் உட்பட கலை நிகழ்வுகளுடன் கூடிய சமயப் பிரார்த்தனைகளையும் எமது மன்றம் மிகவும் நேர்த்தியான முறையில் ஒருங்கமைத்து வருகின்றது. இவற்றினைத் தவிர வருடாந்தம் ஒருங்கமைக்கப்படும் கலை நிகழ்வு ஒன்று எமது சமயத்துடன் இணைந்த பாரம்பரிய கலைவடிவங்களின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி பல பீடங்களையும் சார்ந்த மாணவர்களிடையே மறைந்திருக்கும் கலைத் திறன்களை வெளிக் கொணர்வதற்கான அருமையான சந்தர்ப்பம் ஒன்றாகவும் அமைந்திருக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கட்டமைப்பைக் கொண்டிருக்கும் எமது மன்றம் தரமான சமய ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய வருடாந்த ஆய்வுச்

சஞ்சிகை ஒன்றினை வெளியீடு செய்தல், சமூக கட்டமைப்பின் மிகவும் அடிமட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைநிலையை உயர்த்துவதற்கான தந்திர உபாயங்களை வடிவமைத்து அவற்றினை முடியக் கூடிய இடங்களில் முடியக்கூடிய அளவில் நடைமுறைப்படுத்துதல் ஆகிய உள்ளக நோக்கங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. இவற்றினை நிறைவேற்றுவதற்கு எமது மன்றத்தின் மனித வலு உறுதியாக இருக்கின்ற போதிலும் நிதிவளம் சற்று பின்னடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. எனவே நிதிவளம் படைத்த பெருமக்கள் எமது சங்கத்திற்கு உங்களால் இயன்ற நிதியினை வழங்குவதன் மூலம் உன்னதமான பணி ஒன்றிற்கு உங்களை உட்படுத்திக்கொண்டுள்ளீர்கள் என்ற ஆத்ம திருப்தியினை நீங்கள் அடைந்து கொள்ள முடியும்.

இதுவரையில் எமது மன்றத்தின் பல செயற்பாடுகளுக்கு சமயப் பெரியார்கள், நிறுவன அதிபர்கள், வர்த்தக சமூகத்தினர் மற்றும் சகல துறைப் பொதுமக்கள் என பல துறையினரிடமிருந்து போதுமான நிதி அவ்வப்பொழுது கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் எல்லோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மன்றம் சார்பாக நன்றியினைத் தெரிவிக்க தவறின் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். அவ்வகையில் பெருமனது படைத்த உங்கள் உதவிகளை எமது மன்றம் என்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து நிற்கும் என்பதனை மனமகிழ்வுடன் கூறிகொள்ள விழைகின்றேன்.

சகல பீட மாணவர்களின் ஒத்துழைப்புடன் தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயற்குழு ஒழுங்கமைத்திருக்கும் இந்த கலை நிகழ்வும் மலர் வெளியீடும் முழுமையான வெற்றியை அடைந்திட வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண் தொடர்ந்து எமது மன்ற செயற்பாடுகள் தங்கு தடையின்றி வெற்றியகரமாக நடைபெறவேண்டும் என்ற ஆசிச் செய்தியினையும் இச்சந்தர்ப்பத்தில் வழங்குவதில் முழுமை மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

**இ. ஸ்ரீகாந்தன்**
**முதுநிலை விரிவுரையாளர்**
**புவியியற் துறை, கொழும்பு பல்கலைக்கழகம்**

# வாழ்த்துச் செய்தி

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்ற மாணவர்களால் கொண்டாடப்படவிருக்கும் கலைவிழாவில் வெளியிடப்படும் 'இந்து தீபம்' மலருக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தின் வளர்ச்சி மிகவும் அதிசயத்தக்க வகையில் நிகழ்வதைக்க காண்கிறோம். ஒவ்வொரு நாடும் இத்தகைய அபிவிருத்திக்கான பாதையினை அமைத்துக் கொள்வதில் முனைப்புடன் செயல்பட்டு வருவதையும் காணலாம். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அதன் சமுதாய முன்னேற்றத்திலும் அடங்கியுள்ளது. தனிமனித முன்னேற்றம் என்பது ஒருவன் தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வது என்பதல்ல. தனது தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் உள்ள அக்கறை, மற்றவர்களது நலனைப் பேணுவதிலும் இருந்தால் அதுவே ஒருவனது உண்மையான முன்னேற்றம் ஆகும். இன்றைய மாணவர் சமுதாயம் இக்கருத்தை நன்கு உணர்ந்து செயல்பட்டால் நாட்டின் எதிர்காலம் சிறப்புடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தினர்க்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**

# பௌத்த மதகுருவின் ஆசிச்செய்தி

## *சமாதானம் வளர்ந்தோங்கி அன்பு மலரட்டும்*

கல்வி தொடர்பாக அறிவு, விளக்கம் மலர வேண்டும். அதனூடே பரஸ்பர நம்பிக்கை மலர வாழ்த்துகின்றேன். நாம் அறிந்த வரையில் ஒற்றுமையாக ஆதிகாலம் முதல் சிங்கள பௌத்த தமிழ் இந்து மக்கள் சரிசமனாக வாழக்கூடிய சமுதாயத்தில் உருவானார்கள். இலங்கையின் வரலாற்றுப்படி அனுராதபுரம், பொலநறுவை இராஜ்ஜியங்களுக்கிடையில் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் (பன்சல) இந்துக் கோவில்கள் ஒன்றாக இருந்தன. சகோதரத்துவமாக வாழ்ந்து காலப்போக்கில் இலங்கை மக்களுக்கிடையில் விரோதங்கள் வளர்ந்துவிட்டன. கௌதம புத்தபிரான் இந்துக் கடவுள்கள் மனிதர்களுக்கு வழங்கிய கொடை மக்கள் தங்களுக்கிடையே வேற்றுமைகளை மறந்து அன்பு, கருணை, சகோதரத்துவத்துடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே. 11ம் 12ம் நூற்றாண்டுகளில் எங்கள் இரு சமுதாயங்களுக் கிடையில் எதிர்பாராத ஆக்கிரமிப்பு மனப்பான்மை வளரந்து அவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தரப்பம் ஏற்பட்டது. எங்கள் சமுதாய மறுமலர்ச்சி பாதுகாப்பின் நிமித்தம் எதிர்காலத்தில் பௌத்தர்களும், இந்துக்களும் சகோதர மனப்பான்மையுடன் வாழக்கூடிய சௌபாக்கிய வாழ்வு மலரும். சகலரும் ஆத்மார்த்த அர்ப்பணிப்புடன் சகல ஜீவாசிகளினதும் முன்னேற்றத்திற்கு ஒன்றுபட்டு உழைத்து அன்பு, தர்மம் நிலைக்க வாழவேண்டும் என்பதனை கௌதம புத்தபிரானின் சார்பில் வேண்டிக்கொள்கின்றேன்.

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம் வழங்கிய ''இந்து தீபம்'' இந்து சமய அனுட்டான சகவாழ்வு அமைய்ப் பிரார்த்திக்கின்றேன். வெளிவரும் ''இந்து தீபம்'' இரு சமயங்களுக்கிடையிலும் உள்ள பிணைப்பை உறுதி செய்யும் என்பது எனது நம்பிக்கை. இந்து மன்ற மலரான இந்து தீபத்திற்கு ஆசி வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். கல்வியின் வளமான எதிர்காலத்தில் அடி எடுத்து வைக்கும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்பார்ப்பு வெற்றியடைய பிரார்த்திக்கின்றேன். சகல சௌபாக்கியங்களும் சகலருக்கும் கிடைக்க புத்தபிரானை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**வண. விதாரந்தெனிய மெத்தானந்த தேரர் (எம்.ஏ)**
**ஸ்ரீ சம்புத்தலோக விகாரை,**
**லோட்டஸ் வீதி,**
**கொழும்பு 01.**
(தமிழாக்கம் செய்யப்பட்டது)

புனித வியாகுல அன்னை ஆலயம்
புதுச்செட்டித்தெரு
கொழும்பு – 13.

அறிஞர் போற்றும் பண்பை வளர்க்கும் சிறந்த சக்தி மதத்திற்கே உரியது. மதத்தைப் போற்றும் மனப்பக்குவத்தில் மனிதநேயம் வளர்கிறது. கணனியுகத்தில் சமுதாயச் சீரழிவு மிகுந்த இக்காலத்தில், கல்வித் துறையில் உயர்நிலையிலுள்ள பல்கலைக் கழகத்தில், எழுச்சியுடன் வளர்ச்சிபெற்றுவரும் இந்து மன்றம் செழிப்புடன் செயற்பட்டு வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இயல் இசை நாடக வடிவங்களில், தம் ஆற்றல்களினூடாக, இந்துமதம் எதிர்பார்க்கும் உயரிய விழுமியங்களைச் சமுதாயத்தில் தவழவிட இந்துமன்றம் எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

இந்து மன்றம் வளர்ந்து பயனளிக்க, எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற, மன்றத்தின் உயரிய நோக்கம் கலைநிகழ்ச்சிகளி னூடாகச் சமுதாயத்தைச் சென்றடைய என் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Rev. Fr. Newman.** **BA, BTh (Rome)**

# மன்றத்தலைவரின் உள்ளத்திலிருந்து.....

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் எனும் அருள் வாக்கை அடியொற்றி இயங்குகின்ற, பல வருடங்கள் தொன்மை வாய்ந்த எம் இந்து மன்றத்தின் கலை விழா - 2006ல் மலரும் இவ் இந்து தீபம் மலரினூடே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

பல்கலைக்கழகம் என்பது கல்வி புகட்டும் பீடங்களை மட்டும் உள்ளடக்கியிருக்காமல் கலைகளை வளர்க்கும் கூடமாகவும் திகழ வேண்டும். இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் முகமாகவும் மதம் என்னும் வட்டத்தினை கடந்து தமிழ் கலாசார பாரம்பரியங்களை பேணும் அடையாளமாகவும் இந்து மன்றத்தினால் இந்நிகழ்வு இன்று மேடையேறிக் கொண்டிருக்கின்றது.

மங்கா புகழ் படைத்த எமது இந்து மன்றத்தின் பாதையில் தோன்றிய தடைகளை தகர்த்தெறிந்து தொடர்வதற்கும், புதுப்பொலிவுடன் புத்தொளிபெற்று திகழ்வதற்கும் உறுதுணை புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

குறுகிய காலத்தில் குன்றாத முயற்சியுடன் இவ்விழாவை இனிதே ஒழுங்கமைக்க உதவியோருக்கும், அதேபோன்று பல சிரமங்களுக்கு மத்தியிலும் மன்றத்தின் ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் ஒழுங்கமைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நிகழ்வும் இவ்விதழும் உங்கள் அனைவரின் விழிகளையும், இதயங்களையும் கவரும் என்பது திண்ணம்.

நன்றி

"எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லதே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

தலைவர்
செல்வராஜா பிரவின்சங்கர்

# இணைச்செயலாளர் உள்ளத்திலிருந்து..

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றமானது, கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட தடங்கல்களுக்கு மத்தியிலும் மிகத் திறமையாக செயற்பட்டு வந்துள்ளது. கடந்த இரண்ட வருடங்களாக ஸ்தம்பித்திருந் மன்றச் செயற்பாடுகள் எமது செயற்குழுவின் அளப்பெரிய முயற்சியினால் இவ்வருடம் தனது பாரம்பரிய ஆண்டு நிகழ்வுகள் மீண்டும் நிகழத் தொடங்கியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதுடன் இந்து சமய பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு இட்டுச் செல்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றது. இத்துடன் மட்டுமல்லாது, ஆதரவற்ற சிறுவர்களின் நலனிலும் அக்கறை செலுத்துமுகமாக தொண்டுச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. மேலும், மகா சிவராத்திரி நிகழ்வை ஒட்டி இந்து தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்வதுடன் வருடாவருடம் நிகழும் அனைத்து இந்து சமய நிகழ்வுகளையும், கொழும்ப பல்கலைக்கழக இந்து மாணவர்களுடன் சிறப்பாக கொண்டாடி வருகின்றது. அத்துடன் செயற்குழுவின் வருடாந்த இறுதி நிகழ்வான "கலை விழா" நிகழ்வினை இவ்வருடமும் "கலைவிழா 2006" என்ற நிகழ்வாக இனிதே சிறப்பாக நடாத்துகின்றது.

வருடாவருடம் நிகழும் இந்நிகழ்ச்சிகளை, இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து சிறப்பாக நடாத்துவது கொழும்பு பல்கலைக்கழக ஒவ்வொரு இந்து மாணவர்களினதும் தலையாய கடமையாகும்.

வ. அனுஷன்

# இந்துமத வழிபாடு பற்றிய சில துளிகள்

* பிறப்பிடம் - இளமுறியாக் கண்டம் (The Lost Lemuria) என்னும் கடலுள் மறைந்தகுமரிக் கண்டம்
* காலம் - பதினெண் சித்தர்களால் அனாதிக்காலத்தில் ஆவது கி.மு 43,71,101 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.
* மொழி - தமிழ்மொழி
* இந்துமத நூல்கள் - 108 பூசைமொழிகள் 48 மூல நூல்கள்
* இந்துமத பயன்கள் - தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவுப்படுத்தி வளமான வாழ்வு பெற செய்தல்.
* அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வதே இந்து மதமாகும்.
* இந்து வேதத்தில் இந்து கடவுள்களின் எண்ணிக்கை 884,736 ஆகும்.
* வழிபாட்டு நிலையம் - 108 திருப்பதிகள், 243 சக்திபீடங்கள், 1008 சிவாலயங்கள்
* இவற்றில் ஏமகோடி பீடம் - காளியம்மன்
  காமகோடி பீடம் - காமாட்சி அம்மன்
  சோமகோடி பீடம் - மாரியம்மன்
  வாமகோடி பீடம் - பகலவதி அம்மன்
  என அறிவிக்கப்பட்டு இந்துக்கள் வழிபட்டு வந்தனர்.

ஆதாரம் - மூலப்பதினெண் சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்

### *ஆலயத்தில் செய்யக்கூடாதவை:-*

* கர்ப்ப கிரஹத்தில் கடவுளுக்கு அலங்காரம் நடக்கையில் திரையிட்டிருப்பார்கள். அச்சமயம் வழிபடுதல் கூடாது.
* சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கே செல்லக்கூடாது.
* பலிபீடம், விக்ரஹம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல் கூடாது.
* ஆலயத்தில் நண்பர்களையோ, பெரிய மனிதர்களையோ வணங்கக்கூடாது. இறைவனே மிகப் பெரியவன். அத்தகைய ஆலயத்தில் அனைவரும் சமம்.

* பிரசாதங்களை ஒருவருக்கொருவர் இட்டுக் கொள்ளுதல் கூடாது.
* கோயிலில் திருவிளக்குகளை கையால் தூண்டக்கூடாது.
* சுவாமிகளை தொடுவது, சுவாமியின் திருவடிக்கடியில் கற்பூரம் ஏற்றக்கூடாது.
* போதைவஸ்துக்கள், தின்பண்டங்களை வாயில் வைத்துக் கொண்டு ஆலயத்தினுள் பிரவேசிக்கக்கூடாது.

**பூசைக்குறிப்புகள்:-**

* பூஜையின் துவக்கத்திலும், கணபதி பூசையின் போதும் தூப, தீபம் முடியும் போதும், பலிபோடும் போதும் கைமணியை அடிக்க வேண்டும். மணியின் சத்தத்தோடு செய்யப்படும் பூஜை நல்ல பலன் தரும்.
* கோயில்களில் அர்ச்சகர்களிடமிருந்து தான் பிராசாதங்களை பெறவேண்டும். நாமாக எடுக்கக்கூடாது.
* செண்பக மொட்டு தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.
* முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா இவை பஞ்ச செல்வம் எனப்படும். இஃவை சிவபூசைக்கு ஏற்றவை.
* தாமரை, நீலோற்பவம் போன்ற மலர்களை பறித்த அன்றே பூஜை செய்தல் என்ற விதி இல்லை.
* ஒருமுறை இறைவன் அடியில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களை மீண்டும் பூஜைக்கு பயன்படுத்த கூடாது.
* பவளமல்லி சரஸ்வதிக்கு ஆகாது.
* தும்பை லட்சுமிக்கு ஆகாது.
* அருகம்புல் அம்பிகைக்கு ஆகாது.
* சிவனுக்கு தாழம்பூ ஆகாது.
* விநாயகருக்கு துளசி ஆகாது.
* சிவன் கோவில் என்றால் வில்வத்தாலும், விஷ்ணுகோவில் என்றால் துளசியாலும் பூசை செய்தல் உகந்தது.



# கலைவிழா குழு

**Seated Left to Right**

இ. தணிகைவாசன்
சோ. காயத்ரி
ஸ்ரீ. ரம்யா
ப. தர்ஷனி
இ. ஸ்ரீகாந்தன்
இ. ஜேனுகா
கோ. சுபோதினி
போ. ஹரல்ட்
து. லிஷாந்தன்

**Standing**

ச. மஹிந்தன்
சி. சிறிஹரன்
ந. அகிலன்
செ. பிரவின்சங்கர்
வ. அனுஷன்
ஜெ. ரூபன் கிருபைராஜா
சி. கலைச்செல்வன்
இ. கேசவன்



# கவின் கலையமுதம் ஒருங்கிணைப்புக் குழு

**Left to Right**

*(Seated)*

சி. டினேஷன்
இ. தணிகைவாசன்
சி. நிருஜா
க. நிரஞ்சனி
இ. ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ. தஷந்தி
க. விஷ்ணுப்பிரியா
சி. சிறிஹரன்
சி. மகிந்தன்

*(Standing)*

த. ராகுலன்
க. அருண்பிரசாத்
ச. ராகேஷ்சர்மா
இ. ரொபர்ட்குமார்
செ. பிரவின்சங்கர்
வ. அனுஷன்
போ. ஹரல்ட்
ந. அகிலன்
இ. கேசவன்
சி. கலைச்செல்வன்

*(Absent)*

கு. சஞ்ஜீவன்
வ. மஞ்சு
அ. எழில்ராஜ்
த. தேனுகா
க. ஜெகந்தன்
இ. தவமயுரன்
பா. வசந்தி
ச. பிரசாத்
தி. நிரந்தரி
க. பாலப்பிரபா
B. திருபரன்
A. அசோக்
R. சியாமளன்
S. தர்மேஷ்
A.D. எபனீசர்
பே. சுதாகரன்
இ. ராதிகா



## Left to Right

*(Seated)*

இ. கேசவன் – உபதலைவர்
இ. தணிகைவாசன் – கனிஷ்ட பொருளாளர்
இ. ஸ்ரீகாந்தன் – சிரேஷ்ட பொருளாளர்
பேராசிரியர் திலக் கெட்டியாரச்சி – காப்பாளர்
செ. பிரவின்சங்கர் – தலைவர்
வ. அனுஷன் – இணை செயலாளர்
சி. கலைச்செல்வன் – உப பத்திராதிபதி

*(Standing)*

க. நிரஞ்சனி – உறுப்பினர்
இ. றொபர்ட்குமார் – உறுப்பினர்
ந. அகிலன் – உறுப்பினர்
சி. சிறிகரன் – உப பத்திராதிபதி

*(Absent)*

K. குகராஜ் – உபதலைவர்
நி. சுதாகர் – இணை செயலாளர்
N. ஜெயப்பிரகாஷ் – பத்திராதபதி
கு. தாட்சாயினி
தி. நிரந்தரி
பா. கார்த்திக்
சி. சியாந்த்
து. கேசவன்
S. ஹிரோசன்குமார்
S. தேவபாலன்

# வாழ்க்கை அழகியது...

வாழ்க்கை என்றால் என்ன? அதன் ஆரம்பம் எது? என்று எம்மில் பலர் இன்னும் சரிவர தெரியாமல் போராட்டங்களிலும், குழப்பங்களிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். போகும் பாதை தெரியாமல் அலைந்து திரிகின்றனர். உண்மையில் நாம் வாழ்க்கையின் அர்த்தத்தை சரிவர புரிந்து கொண்டால் வாழ்க்கை ஓர் அழகிய பயணமே.



"கருவூரில் பிறந்து காட்டுருக்கு
செல்லும் பயணமே வாழ்க்கை"

என ஒரு சித்தர் கூறுகின்றார். இங்கு கருவூர் என்பது எமது வாழ்வு ஆரம்பமான தாயின் கருப்பை ஆகும். காட்டூர் என்பது எமது முடிவிடமான சுடுகாடாகும். இவ்விரண்டுக்கும் இடையிலான நீண்ட பயணமே வாழ்க்கையாகும் என சித்தர் கூறுகின்றார்.

"பையூரிலே கிடந்து பாழுரிலே அவதிப்பட்டு
மெய்யூருக்கு செல்லும் வழி தெரியாது தவிக்கும்
மதி கெட்ட மாந்தர்கள்...."

என்று வாழக்கை எனும் சக்கரத்தில் சுழலும் மக்களை விழித்து கவிஞர் அழகாக பாடுகிறார். கவிஞரின் செந்தமிழ் வரிகளில் வியந்து நிற்காமல் "வாழ்க்கை என்பது இறைவனின் பரிசு" என்பதை உணர்ந்து வாழவேண்டும். எவரிடம் இருந்து வந்தோமோ அவரிடமே போய் சேருவதுதான் எமது வாழ்வின் முடிவு. இதுவே எமது இலட்சியமாகவும் இருக்க வேண்டும். இந்த இலட்சியம் வெற்றி பெறவேண்டுமாயின் நாம் நம்மை உருவாக்க வேண்டும் (Personality Development). மனிதன் உணவுகளின் மூட்டைகளாக அல்லாது உணர்வுகளின் வெளிப்பாடாகி திகழ அவனிடமுள்ள நல்ல குணங்களை வெளிப்படுத்துவது அவனின் கடமையாகும். ஆகவே நாம் அன்றாடம் சந்திக்கும் அனைத்தையும் நல்ல அனுபவங்களாகக் கொண்டு மெய்யூராகிய இறைவனின் இருப்பிடத்தை நோக்கி செல்லும் முயற்சியாக எமது வாழ்க்கைப் பயணம் அமைய வேண்டும்.

**சரத்குமார்**
Management Faculty

# The God
## *(The day you see him)*

The powers of him is sensational,
but the beauty of him is a secret.

May be a man feels him,
but not a man sees him.

Believe him he declares,
worship him he delivers.

Do what he says, and
get what he gives.

Realise the supremacy,
love all; serve all

He comes to the house of your heart,
and helps you when you are hurt.

Learn what is good and
practice what you have learnt.

The day comes for you
The day that you were waiting for
The day you see him.

"May God Bless You"

**D. Rathish**
*Faculty of Medicine*
*University of Colombo*

## உண்மை பக்தன்

"ஒரு கல் நீரில் பல்லாயிரம் ஆண்டுகள் இருந்தாலும் நீர் அதனுள் ஊராது, ஆனால் களிமண் நீரில் பட்டவுடனே, அதனுடன் கலந்து விடுகிறது. அது போல, பல துன்பங்களின் நடுவிலும் உறுதியான பக்தியுடையவர்களின் மனம் கலங்குவதில்லை; ஆனால் நம்பிக்கை குறைந்தவனோ, ஓர் அற்ப காரியத்தினாலும் எளிதாக மனம் கலங்கி விடுகிறான்."

- ஸ்ரீ ராமகிருஷ்ணர் -

## பயனுள்ள அறிவுரைகள்

* புதிய மஞ்சள் துணி திரிபோட்டு, விளக்கேற்றினால், செய்வினை, பில்லி சூனியம், பேய் பிசாசு அண்டாது.

* சோறு, கறி முதலியவற்றை மண்பாண்டத்தில் வைத்தோ அல்லது அடுப்பில் வைத்தோ பரிமாறக்கூடாது.

* கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்.

* தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணை தேய்த்தால் புத்திரநாசம். தனது இடது கையினால் சாப்பாடு போட்டால் செல்வம் அழியும். தனது இடது கையினால் படுக்கையை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.

* சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்த கூடாது.

* குரு, ஜோதிடர், வைத்தியர், சகோதரி, ஆலயம் இவற்றிற்கு செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது.

* பெற்றதாய் சாபம், செய்ந்நன்றி கொல்லுதல், பிறர் மனை கூடுதல் இவை மூன்றுமே பிராயச்சித்தமே இன்றி அனுபவித்தே தீரவேண்டிய பாவங்களாகும்.


* நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக்கூடாது.

* வாழையிலையின் அடியில் சிறிது அரிந்து விட்டு கழுவியபின் இலையை போட வேண்டும். சாப்பிடுபவர்களின் வலது கைப்பக்கம் இலையின் அடிப்பாகமும், இடது கைப்பக்கம் நுனிப்பாகமும் இருக்கும்படி போட வேண்டும்.


* காலையில் உஷத் காலத்திலும், மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் விளக்கேற்ற வேண்டும்.

**ஜேனுகா இராஜகோபால்**
4ம் வருடம்
முகாமைத்துவ நிதிப்பீடம

## கோயிலை உடலுடன் ஒப்பிடும் முறை



| | | |
|---|---|---|
| பாதங்கள் | - | முன்கோபுரம் |
| முழங்கால் | - | ஆஸ்தான மண்டபம் |
| துடை | - | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | - | பலிபீடம் |
| மார்பு | - | மஹா மண்டபம் (நடராசர்) |
| கழுத்து | - | அர்த்த மண்டபம் (நந்தி) |
| சிரம் | - | கர்ப்ப கிரஹம் |
| வலது செவி | - | தஷிணாமூர்த்தி |
| இடது செவி | - | சண்டிகேசுவரர் |
| வாய் | - | ஸ்நபந மண்டபம் |
| மூக்கு | - | ஸ்நபந மண்டபம் |
| புருவமத்தி | - | லிங்கம் |
| தலையின் உச்சி | - | விமானம் |



# இறைவன் இருக்கிறான்

இறைவன் இருக்கிறான். அவன் நமது செயல்களை கவனித்து கொள்கிறான் என்று இவ்வுலக மக்கள் நம்புவதால் தான் தனிமனித ஒழுக்கம் ஓரளவாவது கட்டுப்பாட்டில் இருக்கிறது. மனிதர்களின் தவறுகளை கண்டிக்கும் தலைவனாகவே அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவனின்றி ஓரணுவும் அசையாது. மற்ற உயிர்கள் அனைத்தும் இயற்கையின் விதிப்படி அடிபிறழாமல் நடக்கின்றன. மனிதன் ஆறறிவு பெற்றவன், சுயமாய் சிந்திப்பவன் என்பதால், அவனால் இயற்கையின் விதிகளை சுலபமாய் மீற முடிகிறது. ஒழுக்க கேட்டினை உண்டாக்குகின்றான். இதனால் தான் தனிமனித ஒழுக்கத்தை கட்டுக்குள் வைத்திருக்க "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என முன்னோர்களும், வேதங்களும், சித்த புருஷர்களும் கூறுகின்றனர். மனதை அடக்கி, அமைதியுடன் வாழ, பலவகையான மந்திரங்களையும், சுலோகங்களையும், விரதங்களையும் நம் வேதநூல்களும் மகான்களும் வழங்கி உள்ளனர். மனம் என்னும் குரங்கினை இறைவழிபாடு ஒன்றே நல்வழிப்படுத்தும். பேராசைகளையும், பெரும் துன்பங்களையும் மந்திரங்களும், விரதங்களும் சீர்படுத்தும். வறுமை நீங்கி செல்வம் பெற இறைவன் துதியே கைகொடுக்கும். ஒப்பில்லாத இறைவனை மனதில் நிரப்பி, கள்ளமில்லாத வாழ்வை பெற்று அன்புருவாய் திகழும் இறைவனோடு கலப்போம்.

- ஓம் நமச்சிவாய -

மேற்பிரிவு கவிதைப் போட்டியில்
முதலிடம் பெற்ற கவிதை

# இனம் புரியாத வெறுப்பில்



வெள்ளை நிலவொளியை
தினமும் எதிர்பார்த்து வாழ்கிறோம்
ஏழைக் குடிசைக்கு ஏது பவர் லைட்டு
பௌர்ணமி இல்லை என்றால்
இருளில் வாழும் குருடர் நாம்
நிலவுக்கு உடல் தேயும் நோய்
ஏன் தான் வந்ததுவோ?

குளத்தில் நீர் இல்லை என்றால்
இறக்கை உள்ள பறவைகள் பறந்துவிடும்
ஆனால் சிறகு கொண்டும் நீர் இன்றி
உயிர் வாழ முடியாத மீன்கள்
என்ன செய்யும்?
வெறுப்பில் இறந்திடுமா?
இறப்பை வெறுத்திடுமா?

வெயில் வேளையில் தூரம் நின்று பார்க்கையில்
கானல் நீர் ஆறாக ஓடினும்
அருகில் சென்ற நாய் ஏமாந்து நின்றதுவே
அலை வேகத்தில் அள்ளிய பொருட்களுக்காய்
வெறும் விளம்பரம் மட்டும் செய்து
பொருளை பதுக்கி வைத்தது ஏனோ?
பொய் சொல்லி வாழ்வதும் ஏனோ?

சூரியனில் புள்ளிகள் கண்டோம்
நிலவிலும் களங்கம் கண்டோம்
பூமியில் வழுக்கை கண்டோம்
கடல் அலைகளில் சுருக்கம் கண்டோம்
ஆனால் இன்று விளைந்த அரிசியில்
பாதி விளையாத கற்கள் கண்டோம்.
இதனால் நோய் கொண்டதும் ஏனோ?

எத்தனை உள்ளங்கள் ஏங்கின அறிவீரோ!
பட்டம் பெற்றிட நினைத்தன கண்டீரோ!
கொஞ்சம் பணம் படைத்த காரணத்தால்
அவனுக்கு மட்டும் நுழைவாயில் காண்பித்தீரோ!
சொல்ல முடியாத சோகத்தில்
ஒருவன் சொத்தில் அடங்கா பாகத்தில் துன்பம் நிறைந்தது ஏன்?


கன்னி மயில் போல் தேகத்துடன்
ஒருத்தி சென்று அடைந்தால் பேருந்தை
சொல்ல முடியாத தொல்லைதனை
தந்த சிலரின் உள்ளத்தில்
பெண்ணும் சுதந்திரமாய் சென்றிட
உம் உள்ளம் நினைக்காதது ஏன்தானோ?

நாகரிகத்தின் வளர்ச்சி வேகத்தில்
நான்கு திசையும் உள்ளது மோகத்தில்
பாட்டி வாழ்ந்த காலத்தில்
அவர் பிறரை ஆழத்தவில்லை சஞ்சலத்தில்
பிறர் நாகரிக கிணற்றில் விழ நினைக்கையில்
நாமும் சேர்ந்துவிழுந்திட நினைப்பது ஏனோ?

சின்னத் திரையின் பிரச்சினைக்கு
தீர்வு சொல்கிறார் வீட்டு முற்றத்தில்
தன்னை தொடரும் பிரச்சனையை
தீர்க்க முடியாமல் எண்ணத்தில் வாழ்கின்றனர்
பட்டம் என்னும் சின்னத் திரையை உயர்த்திட
மாணவரும் நூலாய் மாறினரோ?

அன்னை தந்தை ஆதரிக்க
வாழ்ந்தோம் நாமும் ஒருகாலம்
இன்று கூட்டைப் பிரிந்த கிளிபோல
பிறர் வீட்டில் சென்று வாழ்கின்றோம்
பொருளாதாரத்தில் உயர்வு பெற
பெற்றோர் பிள்ளையை பலியாய் ஆக்கியது ஏன்?
எம்மைப் பெற்றோர் இருந்தும் அனாதையாய் பூமியில் வாழ்வது ஏனோ?


ஓட்டை குடிசையில் இருந்தவரை
ஒற்றுமை தன்னை பேணி வந்தோம்
மாடி வீடு கண்டதுவும்
செல்போன் கையில் கொண்டதுவும்
புத்தி பேதலித்து மக்கள் நாம்
பொய்யாய் பகட்டு காட்டுவது ஏன்?



நாடு சுபீட்சம் பெறுவதை கனவில் கண்டோம்
நாட்டில் பிரச்சினை ஓங்கிட கண்டோம்
ஓலம் இட்டு பலர் ஓடக் கண்டோம்
ஒழுக்கம் இன்றி பலர் வாழக் கண்டோம்
நீதி நேர்மைகள் தாழக் கண்டோம்
உடலுள்ளவரை நிழல் தொடரும்
உயிருள்ளவரை பிரச்சினை தொடர்வது ஏன்?

ஜாதி பேதம் பார்ப்பது ஏன்
பொட்டு வைத்து ஒருவன் வீதியில் சென்றால்
அவன் சென்றிட்ட பின் புறங்கூறுவது ஏன்?
நாமும் உம்போல் மனிதரன்றோ!
எடமில் பேதம் காண்பது ஏன்?
யாக்கை நிலையாமை அறிவீரோ?
எம்மை தாழ்த்தி பார்ப்பது ஏன்தானோ?

கருக்கொண்ட பேனையின் மை கொண்டு
பிரசவித்த எழுத்துக்கள் இத்தாளில்
பிறக்காத கவிதைகள் எத்தனையோ
பேனாவைத் தேடி அலைகிறது
பேனாவின் கருக்கட்டி நிற்கின்ற மை
வெள்ளைத் தாளில் பிரசவிக்க துடிக்கிறது
முரணான இந்த உலகத்தில்
கருவிலேயே எழுத்துக்கள் கரைகிறது.



எத்தனை பேரின் உள்ளத்தில்
தோன்றிய சிற்சில எண்ணத்தை
கொட்டிய அளவில் நிம்மதி கண்டேன்
இனம் புரியாத வெறுப்பில் - நாமும்

புலம் பெயர்ந்து அலைகிறோம்
இதய அறையினுள்ளே
வலமும இடமும் மாறி மாறி
இதயத்தில் எண்ணங்கள் புலம் பெயர்ந்து வசிக்கின்றன.

இனம் புரியாத வெறுப்பில்
இன்னும் எழுத நினைக்கின்றேன்
காற்றில் எரியும் தீபம் போல்
நானும் போராடி வாழ்கின்றேன்
மீண்டும் துன்பங்கள் சூறாவளியாய்
தொடர்ந்திட வேண்டாம்.....

மனிதனே மனிதனை உண்ணும்
கழுகைப் போல மானுடரே
வாழ நினைத்திட வேண்டாம்.......

தர்ஷினி ரட்ணம்
கொ/இந்துக்கல்லூரி
முகத்துவாரம்



# தசாவதாரமும் சுனாமியும்

உலகவியலில் நாளுக்கு நாள் எத்தனையோ விசித்திரங்கள் நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு என்ற ஐம்பூதங்களினூடாக நிகழ்த்தப்படுகின்றன. விஞ்ஞானம் கூட சில வேளைகளில் இதற்குக் காரணம் கூற மௌனிக்கின்றது. ஆனாலும் விஞ்ஞானமும், சமயமும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்தது என்றே கூற வேண்டும்.

வெளித்தோற்றத்தில் பார்க்கின்றபோது, சமய ரீதியான விடயங்களை நிரூபிக்க முடியாத நிலைமை காணப்படுவதனால் அதனை வெறும் மூடநம்பிக்கைகள் என இன்றைய மக்கள் ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். ஆனால் கல் தோன்றி, மண் தோன்றா காலத்தின் முன் தோன்றிய எமது இந்து சமயத்தின் பாரிய வளர்ச்சியாக திகழ்வதே விஞ்ஞானம் என்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் உலகவியல் வாழ்க்கையில் தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் வேளையில் இறைவன் மக்களை நல்வழிப்படுத்தி நாட்டில் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக பல அவதாரங்களை எடுக்கின்றார் என எமது சமயப் புராணங்கள் கூறுகின்றது.

இதனடிப்படையில், மகாவிஷ்ணுவின் தசாவதாரத்தை இன்றைய விஞ்ஞான மயப்படுத்தப்பட்ட நவீன உலகுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, மகாவிஷ்ணுவானவர் மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், பலராமர், இராமர், கிருஷ்ணர் என பல அவதாரங்களை எடுத்துள்ள போதிலும் 10வது அவதாரமான கல்கி அவதாரம் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

விஞ்ஞானத்தை எடுத்துக் கொண்டால், அதன் ஆராய்ச்சியில் முதன் முதலில் உயிரினங்கள் நீரிலேயே தோன்றியதாக அது கூறுகிறது. இதனை தசாவதாரத்தோடு தொடர்பு படுத்தும் போது, விஷ்ணுவின் முதலாவது அவதாரம் மச்சம். மச்சம் என்றால் மீன். மீன் நீரில் மட்டுமே வாழும். எனவே மெய்ஞ்ஞானம் அன்று கூறிய உண்மைகள் இன்று விஞ்ஞானம் என்ற பெயரில் நிரூபிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இந்த அவதாரங்களை விஞ்ஞான ரீதியான பரிணாம வளர்ச்சியோடு ஒப்பிட்டு நோக்கும்போது நீரில் மீனாக (மச்சம்), நீரிலும், நிலத்திலும் வாழும் ஆமையாக (கூர்மம்), நீர், நிலம், சேற்றில் வாழும் பன்றியாக (வராகம்), காட்டில் வாழும் சிங்கமாக (நரசிம்மம்), குள்ள மனிதனாக (வாமணம்), முனிவராக (பரசுராமர்), சாதாரண மனிதராக (பலராமர்), அரசனாக (இராமர்), தெய்வத்தன்மை பொருந்திய அருளாளராக (கிருஷ்ணர்) என பல அவதாரங்களை விஷ்ணு எடுத்துள்ளார்.

இறுதியாக எடுக்கவிருக்கும் கல்கி எனும் அவதாரம் உலகையே அழிக்கும் வல்லமை பொருந்தியது எனக் கூறப்படுகிறது. அப்படியானால் அண்மையில் இலட்சக்கணக்கான உயிர்களை காவு கொண்ட சுனாமி அனர்த்தம் கல்கி அவதாரத்தின் ஒரு பகுதியா? எனவும் எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

பரிணாம வளர்ச்சியின் உச்சக்கட்டம் இன்று கொலைகளும், சுரண்டல்களும், பொய்களும், ஏமாற்றங்களும் என உலகை சீரழித்துக் கொண்டிருக்கும் வேளை, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் கலகி அவதாரம் எடுக்கப்பட்டு விட்டதோ என்ற சந்தேகத்தையே தோற்றுவிக்கின்றது. காரணம் முத முதலில் தோன்றிய மச்ச அவதாரம் (மீன்கள்) உணரந்தது. ஏனைய மிருகங்களும் அதனை உணர்ந்தன. எனவே கல்கி அவதாரம் தசாவதாரத்தின் ஆரம்பத்திலிருந்தே தனது மகிமையை உணர்த்த ஆரம்பித்து விட்டதா? எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

விஞ்ஞானம் எவ்வளவுதான் வளர்ச்சியடைந்து விட்டாலும், இடம் பெற்ற சுனாமியை மனித சக்திகளால் தடுத்து நிறுத்த முடிந்ததா? விஞ்ஞானமானது சுனாமி ஏன் ஏற்பட்டது என்ற காரணத்தை கண்டு பிடித்தாலும், மீண்டும் ஒரு முறை இந்நிகழ்வு இடம் பெறாமல் அதனால் தடுக்க முடியுமா?

எனவே ஏதோ மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஒரு இயற்கை சக்தி சில விடயங்களை செய்விக்கின்றது. அவற்றை இறைவனின் செயல்கள் என ஏற்றுக் கொள்வதும் சில வேளைகளில் சரியெனவே தோன்றுகிறது அல்லவா?

த. நிஷாந்தினி
சட்டபீடம்
2ம் வருடம்

# ஒரு வாசகம்

சுற்றி நான்கு திசைக்கும்
சுழன்றோசை எழுப்பிய - என்
கோவில் மணியின் மேல்
கட்டிய கூட்டில்
குருவிகள் கூட
இன்று இல்லை.

யுத்தக்களம் கடந்து வந்த
காற்றடித்த
கோபுரச் சுவற்றினில்
இரத்தக் கறைகள்

வற்றிய கேணியில்
புற்றரை பற்றையாய்
எட்ட நடுவினில்
ஒன்றையாய் ஒரு
பழுப்புப்பாதணி

தலைபற்றி உடல் கருகி
தனிமையில் நிற்கும்
முற்றத்து நிலவினை
முத்தமிட்ட பனைமரங்கள்

"ம்" என்ற எழுத்தில்
துளைவிழுந்து போனதால்
"ஓ"வென்று அலறும்
கோபுர உச்சி.


காட்சிகளின் கனத்தில்
மூடும் இமைகள்
கண் மணியின் பரப்பில்
சின்னதாய் ஒரு மின்னல்

புன்னகை புரியும்
வேலனின் திருவடியில்
சின்னதாய்
ஒரு வாசகம்
"யாமிருக்கப் பயமேன்"

தஷந்தி ஸ்ரீ லோகேஸ்வரன்
*முகாமைத்துவ நிதிப்பீடம்*



# போற்றுதற்குரிய இந்துமதம்




மதங்கள் என்பவை மனிதர்களை நல்வழிப்படுத்த அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவிபுரிபவையாகும். அதிலும் குறிப்பாக இந்துமதம் வாழ்க்கைக்குப் பயனுள்ள பல அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ''அன்பே சிவம்'' என்பதே இந்து சமயத்தின் சாரம்சமாகும். அதாவது எவ்வவ் உயிர்களுக்கு அன்பை செலுத்துகின்றோமோ அவ்வவ் உயிரிகளில் சிவபெருமானை காணலாம் என்பதே பொருள். இந்துமதம் மனிதனிலுள்ள தீய எண்ணங்களை நீக்கி. அவனை நல்வழிப்படுத்துகின்றது.

இந்து மதம் வாழ்க்கையை நான்கு பிரவுகளாக பிரிக்கின்றது. அவையாவன பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். இதில் பிரமச்சரியம் அறிவு, ஆற்றலைப் பெறும் காலகட்டமாகவும், வானப்பிரஸ்தம் பற்றற்ற நிலையையும், சந்நியாசம் ஆன்ம ஈடேற்றத்தை அடைய வாழும் வாழ்க்கையையும் குறிக்கிறது. மேலும் இந்துமதம் மனித உடலை கோயிலாக பார்ப்பதுடன், அதனை பேணிப் பாதுகாக்கும் முறைகளையும் எமக்குச் சொல்கிறது.

''சுத்தம் சுகம் தரும்'' எனும் பழமொழிக்கேற்ப இந்து மதமும் சுத்தத்தை முன்னிலைப்படுத்தியுள்ளது. எனவே ஒவ்வொரு இந்துவினது கடமைகளில் நித்தமும் நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து இறைவனை வணங்கவேண்டும் என்பது முன்னிலை வகிக்கின்றது. இது உடற்சுத்தத்தை பேண உதவுகிறது. மேலும் பாதணிகளை வீட்டினுள் அணிவதை தடைசெய்வதுடன், வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இது மறைமுகமாக உதவி புரிகிறது. அத்துடன் உடலை உறுதியாகப் பேண வேண்டுமாயின் உடற்பயிற்சி மிகமிக அவசியம். சிறுவர்கள் விளையாட்டுக்கள் மூலம் உடல் உறுதியைப் பெறிலும், முதியவர்கள் இந்து மதத்திலுள்ள அரும் பொக்கிசமான யோகாசனம் மூலம் தமது உடல் உறுதியைப் பேணி, நோய்த்தாக்கத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்கின்றனர்.

காலையில் சூரிய நமஸ்காரம் செய்வதை இந்து மதம் வலியுறுத்துகிறது. இன்றைய விஞ்ஞான ஆய்வுகளின் மூலம்

அதிகாலலைச் சூரியக்கதிர்களில் விற்றமின் D எனப்படும் உயிர்ச்சத்து காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. விற்றமின் D ஆனது உடல் இயக்கத்திற்கு முக்கியமான விற்றமின் ஆகும். தினமும் வீபூதி தரித்தல் இந்துக்களின் தலையாய கடமையாகும. திருநீரின் நீரை உறிஞ்சும் தன்மையால் உடலிலுள்ள மேலதிக நீர் உறிஞ்சப் படுவதால் உடல் பல உபாதைகளிலிருந்து தப்பிக்கொள்கிறது. வேம்பு, துளசி, மஞ்சள் என்பன சிறந்த மூலிகைகளாகும். இவற்றின் மணம் காற்றுடன் கலந்து நோய்க்கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்தவை. இந்து சமய அனுஸ்ட்டானங்களில் இவற்றின் பங்கு முக்கியத்துவம் பெறுவதால் எமது சுற்றாடலின் தூய்மை பேணப்படுகிறது.



செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்கள் உடல் ஆரோக்கியத்தை பேணுவதாக கூறப்படுகிறது. இந்துமதம் இவ்வுலோகங்களை பல சம்பிரதாயங்கள் மூலம் அணிவதை உறுதிப்படுத்துகிறது. ஆலயங்களில் வீழ்ந்து வணங்குதல், தோப்புக்கரணம் போடுதல், கையை தலைக்கு மேல் உயர்த்தி வணங்குதல் என்பவை எல்லாம் பல்வேறு உடற் பயிற்சிகளாக அமைவதுடன் உடல் உறுதியைப் பேண உதவுகிறது. மேலும் இந்துமதம் உபவாசங்கள், மூலமாக உணவை குறைத்தோ, தவிர்த்தோ உடலில் மேலதிகமாக சேமிக்கப்பட்டுள்ள கொழுப்பை அகற்றி உடலுக்கு புத்துணர்வை அளிக்கின்றது.

இவற்றுடன் மட்டும் நின்றிவிடாது இந்துமதம் உறவுகளுக் கிடையிலான உறவுப்பாலாமாகவும் செயற்படுகின்றது. அதாவது இந்துமத்தில் பல பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இன்றைய அவசர உலகில் பண்டிகைக் காலத்திலாவது உறவுகள் ஒன்றுசேர்ந்து உணவருந்தி, விளையாட்டுக்கள் விளையாடி உறவுகளை பலப்படுத்து கின்றனர். மேலும் இந்துமதம் பல தேவாரங்களையும், புராணக் கதைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தேவாரங்கள் இசையுடன் பாடப்படும் போது கேட்பவரது மனஉழைச்சல் நீங்குகிறது. அத்துடன்



புராணங்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல விடயங்களை மனிதர்கள் விளங்கக்கூடிய கதைகளை தருவதால் சிறுவர் முதல் பெரியோர்வரை இதன் தாக்கம் அதிகமாக இருக்கிறது.

இந்து மதம் பரதநாட்டியம், வாத்திய இசைக்கருவிகளின் பாவனை என்பவற்றை மக்களுக்கு வழங்கியுள்ளது. இவ்வாறான கலைகள் மூலம் மக்கள் உடல் ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் அடைகிறார்கள். இவ்வாறான பல நன்மைகளை மக்களுக்கு பெற்றுத்தரும் இந்துமதம் போற்றுதற்குரிய மதம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மா. கிரிஷாந்
விஞ்ஞான பீடம்
1ம் ஆண்டு

# கர்ணனைக் கொன்ற ஆறு பேர்

கர்ணன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த அழகை ரசித்த சப்தரிஷிகள் எனப்படும் முனிவர்கள் குழந்தையை தூக்கிக் கொஞ்ச விரும்பினர். எனவே, தங்க்ள கைகளை தட்டி ஓசை எழுப்பி, குழந்ைஅயை நோக்கி கையை நீட்டினர். விழித்துப்பார்த்த குழந்தை அவர்களை நோக்கி தனது நெற்றிச்சுட்டியை எடுத்து நீட்டியது.

“நாம் எதையும் கேட்காதபோது குழந்தை தனது சுட்டியை எடுத்துத் தருகிறதே... வருங்காலத்தில் இந்தக் குழந்தைக்கு வள்ளல் தன்மை மிகுந்திருக்கும்!” என வாழ்த்திச் சென்றார்கள் சப்தரிஷிகள். கர்ணன் வள்ளலாக வாழ்ந்தான் என்கிறது வரலாறு. அப்பேர்ப்பட்ட கர்ணனுக்கு மரணம் எப்படி நிகழ்ந்தது தெரியுமா?

சராசரி மனிதனை, மற்றொரு மனிதனால் கொல்ல முடியும். ஆனால், தர்மத்தை தன் உயிர் மூச்சாக எண்ணி வாழ்ந்த கர்ணனை அர்ஜூனனால் கொல்ல முடியவில்லை. காரணம் கர்ணனின் தர்மம். எனவே கர்ணனைக் கொன்றவர்கள் ஆறுபேர். இந்த ஆறு பேருமே புராணத்தில் மிக உயர்ந்தவர்கள் அவர்கள் முறையே: இந்திரன் பரசுராமர், முனிவர் ஒருவர், குந்தி தேவி, சல்லியன், அர்ஜூனன்.

எப்படி இந்த ஆறு பேரும் கர்ணனைக் கொன்றார்கள்?

கர்ணனின் குண்டலங்களையும் கவசத்தையும் தானமாக பெற்று அவனை ஒன்றும் இல்லாதவனாக ஆக்கினான் இந்திரன். பொய் சொல்லி வித்தை கற்றதால் சரியான சமயத்தில் கர்ணன் கற்ற வித்தை மறந்துபோகும் என்று சாபமிட்டு அவனை வித்தையற்றவனாக ஆக்கினார் பரசுராமர்.

கர்ணனின் தேர்ச்சக்கரத்தில் ஒருமுறை முனிவர் ஒருவரின் குமாரன் அடிபட்டு மாண்டான. மகனை இழந்த சோகத்தில், “அவசியமான சந்தர்ப்பத்தில் உனது இந்த தேர் பள்ளத்தில் இறங்கி உன்னைச் சிக்கலில் ஆழ்த்தும்!” என்று அந்த முனிவர் சாபம் கொடுத்தார். அதனால் பாரதப் போரின்போது கர்ணனின் தேர், பள்ளத்தில் சிக்கியது.

நாகாஸ்திரத்தை ஒருமுறைக்கு மேல் மறுமுறை விடக்கூடாது!" என்று கர்ணனிடம் வரம் பெற்று அவனைச் செயலற்றவன் ஆக்கினாள் குந்திதேவி. போரின்போது கர்ணனின் தேரோட்டியான சல்லியன் தேரை பாதியில் நிறுத்தி விட்டுச் சென்றதால் தனியாளானான் கரணன்.

இத்தனை பலவீனங்களுக்கு பின்னர் கடைசியாக அர்ஜுனன் எய்த அம்பினால், கர்ணன் மடிய நேர்ந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அறுவர்க்கும் கண்ணனின் ஒத்துழைப்பும் கர்ணன் மடிவதற்கு பின்னணியாகத் துணை நின்றது! ஆம் கண்ணன் சூத்திரதாரிதானே! அவனுக்கு தெரியாதா... யாரை, எப்படி, எங்கு கொல்வதென்று எல்லாம் அறிந்த கண்ணனும் கடைசியில் கர்ணனிடம் அவனது தர்மத்தின் பலனை யாசித்துப் பெற்ற பின்புதானே அவனை வீழ்த்த முடிந்தது.

உபன்யாசங்களில் இருந்து...
சுபாஷினி நடராஜா
முகாமைத்துவ நிதிப்பீடம்
1ம் வருடம்



நிகழ்வில் பங்குபற்றியோரின் திறன் வெளிப்பாடு



நிகழ்வில் நாடகத்தின் ஒரு காட்சி



நாட்டிய நிகழ்வில் ஒரு பகுதி



பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு

# தைப்பொங்கல் -2006



நிகழ்வுகளில் சில துளிகள்....



# பொங்கல் விளையாட்டு நிகழ்வுகள்



கரப்பந்தாட்டம்



பரிசளிப்பு நிகழ்வு

# திருத்தல யாத்திரை -கதிர்காமம்



இறைவேண்டுதலுடன் யாத்திரை ஆரம்பமாதல்



வழிபாட்டில் ஈடுபடுதல்....

# திருத்தல யாத்திரை -கதிர்காமம்




கதிரமலை தரிசனம்





இராப்போசனம் -தெய்வானை அம்மன் மடம்


# இதுவரை ஒளிர்ந்து சுடர்வீசிய தீபங்கள்...





95/96





96/97





98/99




93/94




99/00




00/01




01/02

# பழக்கதோஷம்

‘‘எம்பா நா சொல்லிறண்ணு தப்பா நினைக்காத எனக்கு வாயி வலிச்சுப்போச்சு, உனக்கிது ஞாயமாப் படுதா” என்றாள் அலமு. ‘‘அட என்னபுள்ள ஊரில் இல்லாததா நான் பண்ணிட்ட எல்லாம் பழகிப்போச்சு. பழக்க தோஷத்தை விடமுடியுமா சொல்லு” என்று சொன்னார் வேலாயுதம்

‘‘றோட்டால போறப்ப போறவாறவ எல்லாம் எங்கைய புடிச்சு உங்கப்பா வாங்கினத எப்ப கொடுப்பாராம். நீயாச்சும் குடு என்று கழுத்தப் புடிக்காத கொறையா கேக்குதுக, மானமே போகுது” என்று சமையல் கட்டில் சமைத்த வண்ணம் அலமு கூறிக்கொண்டிருந்தாள். வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்து சுருட்டை மடித்து வாயில் வைத்த வேலாயுதம் ‘‘அடக்கழுத இந்த ஊட்டில உருப்படியா மூணுவேளை வயித்த நிறப்பணுண்ணா என்ன பன்னுறது, இப்படித்தா பிழைக்க வேண்டி கிடக்கு” என்றவர் மெதுவாக எழும்பி ‘‘அதுசரி, உங்கண்ண எங்க போயிட்டாரு முதலாளிமவன்! சீச்சீ!... மூணு நாள் ஊட்டுப்பக்கமே வரல ஊதாரிநாய்” என்று திட்டியவண்ணம் சமையல் அறையில் நுழைந்தார்.

[illegible] லமு சமைத்த வண்ணம் இருக்க நைஷாக [illegible]ழைந்து மல்லிப் பேணியை எடுத்தார் வேலாயுதம் அதை சட்டென பறித்த அலமு ‘‘உனக்கு மூணு வேளையும் மூக்கப்பிடிக்க திங்கனும் அதில சாராயத்துக்கு வேற துட்டா” என்றவள் ‘ஊருமுழுக்க கடன்வாங்கி சேத்துப்புட்டா அதயாரு கொடுப்பாக நான்தா கொடுக்கனும். விறக வித்து எம்புட்டு கடனனா அடைப்ப, இதுக்குத்தான் ஊட்டுக்கு வர்றவ போறவன் கிட்டயெல்லாம் வெக்கிமில்லாம கைநீட்டி காசவேற வாங்கிறா பிறகென்ன உனக்கு வேளா வேளைக்கு தின்ன வேணாமா போய் அந்த ரூமில உக்காரு” என்று பேசினாள்.

அலமுவின் தாய் நல்லம்மா வீட்டு சுமையை பொறுக்க முடியாதவளாய் நாறபது வயதிலேயே படுத்த படுக்கையானாள். ஊரில போறவாறவர் எல்லார் கிட்டயும் வேலாயுதம் காசு வாங்கி சாட்டுக்கு பேணிக்கள் இரண்டு ரூபா, மூன்று ரூபாவைப் போட்டுவிட்டு சாராயக்கடைக்கு சென்றுவிடுவார்.

‘‘அப்பன் புத்திதானே மகனுக்கு வரும் சும்மாவா சொன்னாங்க” மறுபடியும் முழுங்கினாள் அலமு.



தன் பதின்நான்கு வயதிலேயே குடும்பச் சுமையை சுமக்க ஆரம்பித்தாள் அலமு. விபரம் தெரிந்தபின்தான் அவளுக்கு தன் தந்தை வேலை வெட்டி செய்யாது ஊர்பூராக நம்பிக்கை என்னும் பெயரில் கடனை வாங்கி வைத்திருப்பது அவளுக்கு தெரியவந்தது.

தற்போது அலமுவிற்கு முப்பதுவயது. இதுவரைக்கும் அவள் தன் வாழ்க்கையைப் பற்றி கனவும் கண்டதில்லை. அவள் முழுக்க முழுக்க தன் வீட்டிற்காகவே வாழ்ந்து வந்தாள்.

எந்நேரமும் அலமுவின் தாய் "ஏபுள்ள நீ என்ன வயித்துல வந்து பறந்தா? பணக்காற வயித்துல புறந்திருந்தா இப்ப கண்ணாளங்கட்டி நாலஞ்சு புள்ளகள பெத்துக்கிட்டிருப்பா" என்று புலம்பியவண்ணமே இருப்பாள்.

அன்றும் வழமைபோல அலமு விறகு வெட்டி பாரத்தை சுமக்க முடியாதவளாக மாலை ஐந்துமணி இருக்க நடந்துவந்து கொண்டிருந்தாள்.

"ஏண்டி அலமு இங்க ஒருக்கா வந்திட்டுப் போறது" என்று பக்கத்து தெரு மாரி கூப்பிட்டாள். "என்னக்கா அதுதான் தாரன் எண்ணேல்ல."

"நீ தருவாடி அது எனக்குத் தெரியும் நீ இங்க வாவன் என்றாள். அலமுவும் விறகுப் பாரத்துடன் அருகில் சென்று "என்னக்கா" என்றாள். "அதில்லபுள்ள ஒத்தபுள்ளையாட்டம் ஊட்டுகுடும்பத்த எத்தின நாளைக்கு காப்பாற்றுவாய் உனக்கெண்ணு ஒரு கண்ணாளம் காட்சி வேணாமபுள்ள" என்று அவளின் பாரத்தில் இவளும் பங்குகொண்டாள். "உங்கப்பா ஊருபூரா கடன்வாங்கிட்டாக. இனி ஊரில துட்டு கொடுக்க ஆருமே வரமாட்டுதுக என்னமோபுள்ள ஓசிச்சு நடந்துக்கோ" என்றாள். "என்னக்கா செய்ய எல்லாமே பழக்கதோசமாயிட்டு விறக சுமந்து சுமந்து எனக்கு பழகியே போயிட்டுது" என்று அவளிடம் பேச்சைக் குறைப்பவள் போல் அவ்விடத்தைவிட்டு விலகினாள் அலமு.

அவள் வீடு போகும் போது“நா உசிரோட இருக்கிற வரையும் அப்பா, அம்மாவ நான் பார்ப்பன். எங் காலத்தில என்ன யாரு பாப்பாக நா செத்துப்புட்டா அனாதப் புணமால்ல கிடப்ப” என்று எண்ணியவறே சென்றவள் இருட்டிவிட்டதை மறந்தாள்.

வீட்டிற்கு சென்றவள் விறகுக்கட்டை கோடிப்புறத்தில் போட்டுவிட்டு கிணற்றடியில் இருந்த வாளிநீரில் முகத்தை கழுவிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். வீடே கும் என்ற இருட்டாக இருந்தது. “அடகமுத இன்னும் விளக்கேத்தல, ஏம்மா இன்னும் ஐயா வரலயா?” என்று முனகியவண்ணம் பழக்கப்பட்ட பாதையால் சமையல் அறைக்குள் நுழைந்து தீப்பெட்டியை எடுத்து வந்தாள் பின் சிமினியை துடைத்து விளக்கை ஏற்றினாள்.

அப்பொழுதுதான் மின்மினிப்பூச்சி வந்தாற்போல சிறுவெளிச்சம் உண்டானது. தாயை கூட்டிச்ன்று முகத்தைக் கழுவி மீண்டும் படுக்க வைத்தாள். சமையல் அறைக்குச் சென்று கிடந்த அரிசியில் சோற்றை ஆக்கினாள். பின்னர் முற்றத்திலே இருந்த நான்கு கத்தரிக்காயை பறித்துவந்து கறிக்கு தயாராக்கினாள்.

அன்று வழமையைவிட நலலம்மா “அலமு... அலமு...” என்று இழுக்கத் தொடங்கினாள். ஆவேசமாகவும் அதிகமாகவும் அழைப்பது போல அது இருந்தது. தாயை நோக்கினால் அவர் பழைய புராணத்தை தொடங்கி விடுவார், பின் சமையலை யார் கவனிப்பார் என்றெண்ணிய அலமு சமையல் வேலைகளை தீவிரமாக கவனித்தாள். பின்னர் அலமுவின் தந்தை வந்து “ஏ.. புள்ள என்ன றோட்டுவரக்கும் உங்கம்மாட புலம்பல் கேக்குது. என்ன இன்னிக்கு இப்படி புலம்புது” என்று கேட்க “அத நீயே கேளு” என்று ஒற்றை வார்த்தையில் கூறினாள் அல்மு.

எவ்வளவுதான் குடிகாரனாக இருந்தாலும் வேலாயுதம் நல்லம்மா மேல் அளவுகடந்த அன்பு வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. மனைவி படுத்திருந்த பாயின் அருகில் சுருட்டு குடித்தவண்ணம் அமர்ந்து “அட என்னாச்சிண்ணு இப்படி புலம்பாறா” “ஏதாச்சும் வேணுமுண்ணா சொல்லன்” என்றார். நல்லம்மாவோ “அல்மு... அல்மு....” என்றவாறே படுத்திருந்தாள். “அதுதான் துண்ணுறதுக்கு ஏதோ பண்ணுதே நீ எங்கிட்ட சொல்லு” என்றார்.

நீண்ட நாட்களாக இப்படி மனைவியுடன் ஆற அமர அமர்ந்து பேசியதில்லை வேலாயுதம். இரண்டு மணித்தியாலங்கள் சென்றபின் வேலாயுதம் மன குழப்பத்துடனும், கவலையுடனும் வெளியில் வந்து அமர்ந்தார்.

''சோத்த போட்டிருக்கு வந்து சாப்பிடுக" என்று தகப்பனாரக்கு கூறிவிட்டு அலமு தாய்க்கு ஊட்டிவிட சென்றாள். மூலையில் படுத்திருந்த தாய் பேச்சுமுச்சு இல்லாது கிடப்பது அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. ஓ என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள் அலமு. அலமுவின் சத்தத்தில் ஊரே திரண்ட வந்தது.

இரவிரவாக சவத்துடன் அலமுவின் உரையாடல் ஆரம்பமானது. இரவு எட்டு மணியிருக்கும் வேலாயுதத்திற்கு அப்பொழுது தான் தன் மனைவி இறந்தது தெரிந்து அதிர்ச்சி அடைந்து உட்கார்ந்திருந்தார். பிணத்தை எடுப்பதற்குக் கூட வழியில்லாமல் என்ன செய்வதென்று அறியாது அமர்ந்திருந்தாள் அலமு தனது முந்தானையால் கண்ணீரையும், மூக்கு நீரையும் துடைத்தவண்ணம் இருந்தாள் அலமு. ''ஏப்பா எங்கிட்ட ஒரு சதம் கூட இல்ல. காலேதான் மாரி அக்காட கடன் முழுவதையும் கொடுத்திட்ட உங்கிட்ட ஏதாச்சும் இருந்தாக் கொடன்" என்று ரகசியமாக அருகில் அமர்ந்திருந்து கேட்டாள் அலமு. "உங்கிட்ட இருக்காது ஊர் புள்ளாக கடனவாங்கி வைச்சா ஆபத்துக்கு இப்ப ஆருகொடுப்பா கேட்டா எல்லாம் பழக்கதோஷம் விடமுடியாது, என்பியே. இப்ப என்ன பண்ணுறது நா அப்பவே சொன்னங் கேட்டியா என்று அழுது புலம்பினாள் அலமு. பின் இவ்வளவு நாளாக வீட்டிற்குவராத தமையன் அன்று பார்த்து வீட்டுக்கு வந்தான். தாய் இறந்ததைக் கண்டு அதிர்ச்சியில் அவனும் மூழ்கிப்போனான். ஏதோ மூலையில் அமர்ந்த தமயனைக் கண்டவள் ஓடிச்சென்று அவனிடம் பணம் கேட்டுப்பார்த்தாள். அவன் சட்டைப் பைக்குள் பார்த்தாள். ஒரு பணமுமே கிடைக்கவில்லை.

கடைசியில் எல்லாக்கடனும் கொடுத்து முடித்த மாரியிடம் சென்று கேட்டாள். "அலமு நீ காலேல கொடுத்த முப்பதுகாசும் எங்கிட்டத்தான் கிடக்கு நான் இன்னும் இவருகிட்ட கொடுக்கல அதவேணுண்ணாதாரன்" என்றதும் அவள் மிகுந்த சந்தோசமடைந்தாள். "ஏப்பா வேலாயுதம் படுக்கயில கிடந்த புணத்த இப்ப நடுவீட்டில வைக்கப்படாது பன்ரெண்டு மணிக்குள்ள

சவத்தை எடுக்கனும் என்று ஏதோ ஒரு குரல் கேட்டது" ஒருவழியாக பத்துமணிக்கெல்லாம் பிணம் எடுக்கப்பட்டது.

மூன்று நாட்கள் இவ்வாறு ஓடிவிட்டன. மூன்றுநாளும் வேலாயுதம், அவன் மகனும் வீட்டைவிட்டு வெளியில் புறப்படவில்லை அலமுவும் சோகத்தில் இருந்தவள் பின் மூன்றாம் நாள் கவலையை பூட்டிவிட்டு விறகு வெட்ட புறப்பட்டாள். அப்போது வீட்டிலிருந்த தமையனையும் தந்தையையும் காணாதவளுக்கு மறுபடி பெரும் கோபம் வந்தது விறகு வெட்டும்போது அங்கே அவள் தந்தை விறகுவெட்டிக்கொண்டு நிற்பதைக் கண்டு பெரும் சந்தோச மடைந்தாள். நல்லம்மாவின் மந்திரவார்த்தையோ, அன்போ, கொடுர வார்த்தையோ புரியவில்லை. கடைசிவரை நல்லம்மா கூறியது அலமுவிற்கு தெரியாமற் போய்விட்டது. மாலை தமயன் கூலி வேலைப் பணத்துடன் வாசலில் நின்றது. மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது அலமுவிற்கு.

A. நவதர்ஷினி
கலைப்பீடம்

பர

# மதத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டமுறைமை

## ஓர் கண்ணோட்டம்

மனித இனத்தின் ஆரம்பத்திலிருந்து மதம் ஓர் முக்கிய பங்கை வகிக்கின்றது. உலகின் மிகப்பழைய நாகரீகங்களை (மொஹொங் -சதாரோ, ஹரப்பா) நோக்குமிடத்து ஆரம்ப மனிதனின் வாழ்வில் மதமும், மனிதமும் ஒன்றாகவே இருந்துள்ளன. இம்மதம் அம்மனித புகையிரதத்திற்கு தண்டவாளமாக இருந்துள்ளது. தொடர்ந் தேர்ச்சியாக மதத்தினையும், மனித வாழ்வையும் பிரிக்க முடியாதளவில் பிணைத்துக்கொண்ட மனிதன் அதன் வழி வாழ்வதையே முக்கியக் கடனாகக் கொண்டிருந்தான். இவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்று இன்றைய உலகில் அனைவராலும் ஏற்று பின்பற்றப்படும் சட்டமாக திகழ்கின்றது. இக்கட்டுரை உலகிலுள்ள மதம் சார்பான சட்டமுறைகளையும் அதன் தாக்கத்தையும் ஆராய்வதாக அமைகின்றது.

பெரும்பாலான சுதந்திர அரசுகள் மதத்தை விடுத்து சுயாதீனமான சட்டங்களை உடையனவல்ல. ஏதோ ஒரு வகையில் மதத்தின் தாக்கம் இருக்கத்தான் செய்கிறது. இயற்கையோடு ஒன்றுகலந்து வாழ்ந்த மனிதன் பின் மதத்தோடு ஒன்று கலந்து மூழ்கியிருந்தான். இதனாலே மதத்திற்கும் மன்னராட்சிக்குமிடையே பிணக்குகள் ஏற்பட்டன. இறுதியில் பெரும்பாலான நாடுகளில் அதிகாரம் முடிசூடினாலும் இயற்கையோடு தொடர்பு பட்டதான இவ்வகையான மதம் அடிப்படையான சட்டமுறைமைகள் மாற்றமடையாதவையாகவே உள்ளன.

இன்றைய நவீன உலகில் இந்துச்சட்டம், Jewish சட்டம், முஸ்லீம் சட்டம், canon சட்டம், என பல்வேறு மதம் அடிப்படையான சட்டமுறைமைகள் நிலவி வருகின்றன. இதை விட சில வழக்காற்றுச் சட்டங்களும் மத்தின் தாக்கத்தோடு பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. பாரம்பரிய, வழக்காறு ரீதியாக வளர்ச்சி பெற்று வரும் இவ்வாறான இச்சட்டங்கள் எல்லோராலும் ஏற்று ஒழுகக் கூடியதாக நவீன உலகில் திரிபு பெற்று பிரயோகிக்கப்படுவதனால் இறவா வரம் பெற்றவையாக உள்ளன.

## இந்துசட்டம்

பல்வேறுபட்ட நாகரீகங்களைக் கொண்ட இந்தியதேசம் இந்து சட்டத்தின் ஊற்றாக உள்ளது. இச்சட்டம் இந்து மத தர்மக் கோட்பாட்டின் அடிப்படையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்திய நாட்டின் சரித்திரங்களில் இத்தர்மக் கோட்பாடு பகவத் கீதையிலிருந்து ஓர் நெறிபடுத்தப்பட்ட வடிவத்தை பெற்றுக் கொண்டது எனலாம். இத்தர்மக் கோடபாடுகள், நியாயமானதாகவும் ஒப்புரவானதாகவும் காணப்படுவதனாலேயே இவற்றின் தாக்கம் சட்டவாக்கங்களிலும் நிர்வாக, நிதித்துறைகளிலும் காணப்படுகின்றது.

இந்தியாவின் இந்துச்சட்டம் ஓர் ஆள்சார் சட்டமாக இந்துக்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது. . ஒன்றில் பிறப்பினால் இந்துவானவர்களுக்கும், மற்றும் மதமாற்றம் மூலம் இந்துவானவர்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்றது. இவ்விந்து மதச் சட்டங்கள் சைவம், வைணவம் எனம் இரு பிரதான இந்து மத பிரிவுகள ஊடாக ஆளப்படுகின்றன. இந்துச்சட்டம் உலகிலுள்ள நாடுகளுக்கு பொருந்தக்கூடியது என்பதனால் 18ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் Sir William Jones என்பவர் சமஸ்கிருதம் கற்றுத் தேர்ந்து இந்துச்சட்டங்களை ஆராய்ந்து Code of Manu எனும் நூலை வெளியிட்டார். அதன் பின்னர் இலங்கையின் முதலாவது பிரித்தானிய அரசியலமைப்பை தீட்டிய கோல்புறூக் A Dignest of hindu law on contracts and succes எனும் நூலினை வெளியிட்டார். இந்நூலில் மக்களின் வாழ்க்கையில் இந்துச்சட்டம் பெறும் முக்கியத்துவத்தினையும், அதன் பங்கினையும் விபரித்துள்ளார். இந்துச் சட்டத்தின் ஓர் மூலமான அர்த்தசாஸ்திரம் எனும் கௌடில்யரால் எழுதப்பட்ட நூல் அரிஸ்தோட்டிலின் கருத்துக்களுடனும் நவீன உலகில் நிலவும் கருத்துக்களுடனும் ஒத்ததாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பௌத்த சட்டம்

மனித இயந்திரம் பௌத்த மதத்தின் எட்டு தத்துவங்கள் அடிப்படையிலேயே இயங்குகின்றது. என்று பௌத்த மதம் கூறுகின்றது. இதனடிப்படையில் சரியான நோக்கம் சரியான சிந்தனை, சரியான பேச்சு, சரியான செயல், சரியான பிரயத்தனம், சரியான கருத்துக்களை கொண்டிருத்தல், சரியான மனக்கட்டுப்பாடும் ஒழுங்குகளும், சரியான நடத்தை, என்பவற்றையே பௌத்தமதம்

வலியுறுத்துகின்றது. பௌத்த சட்டமும் உயிர்கள் மீது அன்பு செலுத்துதல் எனும் தத்துவத்தின் அடிப்படையில்தான் காணப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பர்மா, மலாயா, தாய்லாந்து, தீபெத், சீனா, வியட்நாம், கொரியா, யப்பான், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இச்சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. பல நாடுகளில் இது அடிப்படை சட்டமாகவும் காணப்படுகின்றது.

**JEWISH LAW**

ஆபிரகாம், Patriarch என்போர்களால் இச்சட்டம் வளர்க்கப்பட்டுள்ளது. யூதர்களால் பின்பற்றப்பட்ட இச்சட்டத்தின் ஆரம்பம் கி.மு. 3,700 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக Jewish Calandar குறிப்பிடுகின்றது. பத்துக்கட்டளைகளின் அடிப்படையிலேயே இச்சட்டம் அமையப் பெற்றுள்ளதுடன் இக்கட்டளைகள் இறைவன் தனது கைகளால் வரையப்பட்டதாக நம்புகின்றனர். சீனாய் மலைவாசிகள், இஸ்ரேலியர்களால் இது உண்மையானதாக நம்பப்படுவதுடன் பின்பற்றப்படுகின்றது.

**CANON LAW**

கத்தோலிக்க தேவாலயங்களில் பரிபாலனத்திற்கான சட்டமாக இது ஆரம்பத்தில் காணப்பட்டது. பின்னர் தேவாலயத்திற்கும் ஏனைய துணைத்தாபனங்களுக்குமான உறவைப்பற்றி கூறுவனவாக காணப்பட்டதுடன், கிரேக்கத்திலே இது உதயமானது. கிழக்கு இராச்சியம் Rome நகரைத் தழுவியதாகவும் பின்னர் கொன்ஸ்தான் தினோயிலைத் தழுவியதாக காணப்பட்டது. Canon சட்டம் Council of Nicaca, Council of Carthay எனும் ஒரு சபைகளில் தோற்றுவிக்கப்பட்டதென்பர். Pope Adrian I Coanmo of the Roman Church எனும் நூலை எழுதியிருந்தார் இது சட்டம் Canon பற்றிய முதலாவது நூலாகப் பின்னர் தோற்றம் பெற்ற பல்வேறு நூல்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது.

## இஸ்லாமிய சட்டம்

உலகம் முழுதும் வாழும் 500 million மக்கள் தொகையைக் கொண்ட முஸ்லிம் உலகம் முஸ்லிம் சட்டத்தை ஏற்றுள்ளது.

மொரோக்கோ, Tunisia, Syria, Islamic Republic of Mauritania, Iran, Afghaniztan, Yeman, Pakistan மற்றும் இந்தோனேசியா உட்பட பல்வேறு நாடுகளில் இச்சட்டம் பாவிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு நாட்டு அரசியலமைப்பில் இம்முஸ்லீம்களுக்கு பிரயோகிக்கப்படும் முஸ்லீம் சட்டம் இன்றைய உலகில் ஓர் தூய ஆள்சார் சட்டமாக பிரயோகிக்கப்பட்டு வருவதுடன், சில நாடுகளில் உத்தியோகபூர்வமான சட்டமாகவும், சில நாடுகளில் அரச மதச் சட்டமாகவும் மத்தியக் கிழக்கு நாடுகிளல் அரசியலமைப்பாகவும் கூட பிரயோகிக்கப்படுவதை அவதானிக்கலாம்.

குர் ஆன், ஹதீஸ், இக்மா, கியாத் எனும் நான்கு சரித்திர மூலங்களைக் கொண்டுள்ள இம் முஸ்லிம் சட்டத்தின் ஆரம்பம் அல்லா இறைவனால் அருளப்பட்டதாக நம்பப்படுகிறது. குர் ஆன் புனித நூல் முகம்மது நபிகளால் வெளியிடப்பட்ட கருத்துக்களையும் அவருக்கு முன் வாழ்ந்த இறை தூதர்களின் கருத்துக்களையும் ஏத்துகின்றது. உலகில் பெரும்பாலான நாடுகளில் இச்சட்டம் பிரயோகிக்கப்படுவதுடன் எகிப்து தேசத்தின் சட்ட இடைவெளியை முஸ்லிம் சட்டமே பூரணப்படுத்துவதாக பிரயோகிக்கப்படுகின்றது.

மேற்கண்டவாறு இம்மதம் அடிப்படையான சடடங்கள் ஓர் இனம் சார்பானதாகவும், ஓர் மதத்திற்கும் மாத்திரம் பொருந்தக்கூடியதாக அமைந்துவிடுவதனால் பல்வேறு சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது. வெவ்வேறு இன, மதம் கொண்ட அல்லது பன்மைத்துவ சமூகத்தை கொண்ட நாடுகளுக்கு இவ்வாறான மதம் சார்பான சட்டங்கள் பொருத்தமானவையா? என்பது சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது. இதற்கு காரணம் இச்சட்டங்கள் யாவும் ஒரே மாதிரியானவை அல்ல என்பதாகும். சட்டத்தின் முன் யாவரும் சமமானவர்கள் எனும் சட்டவாட்சிக் கோட்பாடு இங்கு முரண்பட்டுக் கொள்வதை அவதானிக்கலாம். உலகின் பன்மைத்துவ நாடுகள் சில பன்மைத்துவ கூட்டங்களுக்கு அல்லது (Religion based legal system) மதம் அடிப்படையான சட்டமுறைமைக்கு முதலிடம் கொடுப்பதனால் பாரிய சிக்கல்நிலையை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. இதற்கு மதம் சார்பற்ற நாடாக பிரகடனப் படுத்திக் கொள்வதா? என்ற கேள்வியும் எழுகின்றது. அப்படியாயின்

இந்திய தேசத்தை கொஞ்சம் சிந்தையில் எடுத்துக்கொள்வது தவிர்க்க முடியாதது.

இலங்கையில் அரச மதம் பௌத்த மதம் என அரசியலமைப்பின் II அத்தியாயம் 9ம் உறுப்புரை குறிப்பிடுகின்றது. ஆரம்ப காலத்திலிருந்து சிங்கள சட்டம் அரச சட்டமாக பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு பக்கமிருக்க மறுபக்கம் 1806ம் ஆண்டு முதல், நாடெங்கும் பிரகடனப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாத பட்சத்தில் இஸ்லாமிய சட்டத்தை பிரயோகிக்கலாம் என பல வழக்குத்தீர்ப்புகள் கூறினாலும், இஸ்லாமிய சட்டம் இலங்கை Muslim சட்டத்திலிருந்து முரணானது எனவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட தமிழர்களுக்கு தேசவழமைச் சட்டம் பிரயோகிக்கப்படுவதுடன் இது இந்து சட்டத்தின் பல ஏற்பாடுகளை தன்னிடத்தே கொண்டுள்ளது. ஆள்சார் சட்டமாகவும், இடஞ்சார் சட்டமாகவும் திகழும் இத்தேசவழக்கச் சட்டமும் ஆரம்ப காலத்திலிருந்து எழுத்துருவிலிருந்த சட்டமாக பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு பௌத்த மதத்தை அரச மதமாக ஏற்பதுடன் ஏனைய மதங்களையும் ஏற்றுள்ளது. இந்திய தேசம் தன்னை ஓர் மதச்சார்பற்ற நாடாக பிரகடனப்படுத்தியுள்ளது என்றாலும் இந்துக்களுக்கு சில இடங்களில் முக்கியத்துவம் வழங்காமல் இல்லை. மறுபுறம் முஸ்லிம் சட்ட நாடுகள் முழுக்க முழுக்க முஸ்லிம் சட்டத்தை தவிர ஏனையவற்றை ஏற்கவில்லை. இன்றைய மத்தியக் கிழக்கு நாடுகள் முஸ்லிம் சட்டம் அல்லது இஸ்லாமிய சட்டத்தை பிரயோகிப்பதனால் பெண்கள், சிறுவர்கள் என்போர் பாரபட்சமான முறையிலும் நடாத்தப்படுகின்றனர். குடியியல், கலாசார, அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்திற்கும் ICCPR முரணான பல விடயங்களை கொண்டுள்ளமையும் ஓர் குறைபாடான அம்சமே.

இந்துச் சட்டம் Dharma, Artha, Kama எனும் மூன்று அம்சங்களின் அடிப்படையில் வெவ்வேறு இனப்பிரிவுகளுக்கு பிரயோகிக்கப்படுவது பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு உலகம் முழுதும் பிரயோகிக்கப்படும் சட்ட முறைமைகள் மதம் அடிப்படையானதாக உள்ளதனால் பல சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளதோடு பாதகமான அம்சங்களையும் தோற்றுவிக்கவேச் செய்கின்றது. சாதகமான அம்சங்கள் என்பதால் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொள்ளவும். பாதகமான அம்சங்கள் உள்ளன என்பதால் அவற்றை ஒதுக்கவோ முடியாது. இவை கால மாற்றத்திற்கு ஏற்ப சுதாகரிக்கப்பட்டு பிரயோகிக்கப்படுவது அவசியமான ஒன்று என்பதுடன். இதன்வழியை தோற்றுவிப்பதும் ஏற்பதும் தேவையாக மாறியுள்ளது

எனவே மனித இனம் மதத்தை தனது வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டுமேயொழிய அழிவுக்கு பயன்படுத்துவது பேராபத்துகளை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே மதம் சார்பான சட்டமுறைமைகள் காலத்தின் தேவைக்கேறப பிரயோகிக்கப்படுவதும் ஒதுக்கப்படுவதும் அவசியம் என்பதோடு இது மக்களின் நாகரீக வளர்ச்சியுடனும் நாட்டின் சட்ட வளர்ச்சியுடனும் தொடர்புபட்டதாக உள்ளது. எனவே இவைகளை கருத்திற்கொண்டு இச்சட்டங்கள் பிரயோகம் அமையவேண்டும் என்பதையே இக்கட்டுரை வழியுறுத்து கின்றது. ஓர் நுனிப்புல் மேய்சசலான இக்கட்டுரை மதம் அடிப்படையான சட்டமுறைமைகான தொட்டுச் செய்வதாகவும் நவீன சட்ட முறைமை எவ்வாறு அமையவேண்டும் எனும் சிந்தனையை தோற்றுவிக்கும் தூண்டுதலாகவும் உள்ளது என நம்புகின்றனர்.

நன்றி

S. மோகனராஜன்
முதலாம் வருடம்
சட்ட பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்



# நல் வாழ்வே ஆன்மீகம்

மாறிவரும் இன்றைய இயந்திர வாழ்விலும் ஆன்மீகம் மனிதவாழ்வில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிறது. விஞ்ஞானத்தின் எல்லையற்ற வளர்ச்சியின் மத்தியிலும் ஆன்மீகத்திற்கு எதிரான கோட்பாடுகள் அவ்வளவு வலுப்படாமல் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஆன்மீகம் பின்னிப்பிணைந்திருக்கின்றது. வாழ்க்கை வேறு ஆன்மீகம் வேறு அல்ல. அது காடுகள், மலைகளில் இருந்து தவம் செய்யும் முனிவர்களுக்கான விடயம் அல்ல. அது நம் அனைவருக்கும் உரிய விடயம்.



நம் வாழ்வை ஆன்மீக வாழ்வாக மாற்றவே மதங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மதம் என்பது வெறும் கிரியைகளும் சம்பிரதாயங்களும் மட்டுமல்ல. 'மதம் என்றால் அது நடைமுறையில் கடைப் பிடிக்கத்தக்க தாக இருக்கவேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் செயல்படுத்தத்தக்கதாக இருக்க வேண்டும். என்கிறார் சுவாமி விவேகானந்தர். இன்றைய நாட்களில் நமது ஆன்மிக செயற்பாடு களானது கிரியைகளுடனும், சம்பிரதாயங்களுடனும் நின்றுவிடுகிறது. இவையாவும் ஆன்மீகத்தின் ஆரம்பப்படிநிலைகளே. மிகச்சிலரே இப்படி நிலைகளைத்தாண்டி உயர்ந்த நிலைகளிற்கு செல்கின்றனர். சாதாரண உலகியல் வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே ஆன்மீகத்தில் முன்னேறிச் செல்லலாம் என்பதையே சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். 'மதத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் இடையில் கற்பிக்கப்பட்டுள்ள போலிவேறுபாடுகள் எல்லாம் மறையவேண்டும்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

கடவுள் மீது நம்பிக்கையும் பக்தியும் இருப்பதனாலேயே நாம் ஒருசில ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். இப்பக்தியையும் நம்பிக்கையையும் பயன்படுத்தி நம்மை மேலும் ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். நம்மை தன்னிச்சை யாக சுயமாக இச்சயெற்பாடுகளில ஈடுபடுத்திக் கொள்ளலாம். அல்லது சில நிறுவனங்களில் இணைந்து அவற்றின் உதவியைப் பெற்று இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். இச்செயற்பாடு களில் ஈடுபடத் தேவையான தகவல்களை ஆன்மிக நூல்களை கற்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இது வெறும் அறிவிற்கான

கல்வியல்ல. இவை நம் வாழ்வில் பின்பற்றிச் செயல்படுத்தப்பட வேண்டியவை. 'மதம் என்பது சொற்பொழிவுகளிலோ, நூல்களிலோ கொள்கைகளிலோ இல்லை. அனுபூதியே மதம். திருடப்படாது இது எல்லோருக்கும் தெரியும். அதனால் என்ன? திருடாதவனே அதன் உண்மையை உணர்வான்' என்றார் சுவாமி விவேகானந்தர். நாம் பின்பற்றவேண்டிய இவ்விடயங்களை வேதங்கள் எடுத்துரைக் கின்றன. 'நாம் சாதாரண வாழ்வில் பின்பற்றக்கூடிய விடயங்களையே வேதங்கள் எடுத்துரைக்கின்றன' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மீக இலக்கியங்கள் பற்றி ஒரு தெளிவற்ற நிலைமையை காணக்கூடியதாக உள்ளது. எது மிகவும் பொருத்தமான இலக்கியம் என்பதில் குழப்பம் நிலவுகின்றது. வேதங்களே இந்துமதத்தின் அடிப் படையான நூல்கள். வேதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையே நமது ஆன்மீக மகான்கள் பயின்றுள்ளனர். நீண்ட வரலாறுடைய இந்துமதத்தில் காலத்திற்கு காலம் தோன்றிய மகான்கள் இக்கருத்துக்களை இலகுபடுத்தி அழுத்தமாக தெரிவித்துள்ளனர். இவைகளும் தொகுப்புக்களாக எழுத்துருப்பெற்று இன்று நம் முன் ஆன்மீக இலக்கியங்களாக உள்ளன. பகவத் கீதை, சுவாமி ராமகிருஷ்ணருடைய நூல்கள் ரமண மகரிஷியினுடைய நூல்கள் போன்றன இவற்றுட் சில இவையாவும் வேதாந்த கருத்துக்களையே அடிப்படையாக கொண்டவையாகும். சுவாமி விவேகானந்தர் பகவத் கீதையை 'வேதாந்தத்தின் மிகச்சிறந்த விளக்கவுரை அது' என வர்ணித்தார். இவ்வாறு பல இலக்கியங்கள் காணப்பட்டாலும் இவற்றின் அடிப்படைத் தத்துவம் ஒன்றாகையால், இவற்றுள் ஏதேனும் ஒன்றை பின்பற்றினாலே நம் இலக்கை அடையமுடியும். உலகம் போற்றும் மகான்களில் ஒருவரான மாகத்மா காந்தி பகவத் கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையே பின்பற்றி வாழ்ந்தார். "ஒவ்வொரு இந்துவும் ஸ்ரீமத்கீதையை பாராயணம் பண்ணாது ஒருநாளாயினும் வீண்போகுதல் கூடாது" என்கிறார் மகாத்மா காந்தி. இன்றைய சூழ்நிலையில் பகவத்கீதை பயின்று பின்பற்றுவதற்கு ஓர் சிறந்த நூலாமே. மிகுந்த நம்பிக்கையுடன் அதனை கற்று! பின்பற்றுவதன் மூலம் நம் வாழ்வின் மாற்றத்தை நாம் உணர முடியும்.

ஆன்மீக செயற்பாடுகளுக்கு உதவி புரிகின்ற பல்வேறு நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவை ஆன்மீக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதிலும் ஆன்மீக சாதனைகள் பயிலப்படுத்துவதை அதிகரிப்பதற்கும் உதவிபுரிகின்றன். வாழும்

கலைப்பயிற்சி நிறுவனம், சாயி நிறுவனங்கள், ராமகிருஷ்ண மிஷன், சிவதொண்டர் நிலையம் போன்றன இவற்றுட் சில. இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. இந்நிறுவனங்களில் நடைபெறுகின்ற தியானம், ஜெபம், பஜனை, சேவை போன்ற ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுவதன் மூலம் நாம் ஆன்மீக முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு ஆன்மீகப்பயிற்சிகளில் ஈடுபடும்பொழுது நமது மனம் ஒருமைப்பட்டு அதன் ஆற்றல் அதிகரிக்கின்றது. இது தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது. இது நமது செயல் திறனை அதிகரிக்கச் செய்கின்றது. செயல் புரியாமல் யாரும் இருக்க முடியாது. 'செயலற்ற நிலை என்றால் நாம் என்ன புரிந்து கொள்கிறோமோ, அந்த மந்த நிலை ஒருபோதும் வேதாந்தத்தின் இலட்சியம் அல்ல' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

'வேதாந்தத்தின் இலட்சியமான உண்மையான செயல்நிலை என்பது. என்ன நடந்தாலும் சமநிலை குலையாத, கலங்காத, நிரந்தரமான அமைதியுடன் இணைந்தே இருக்கும். இதுவே செயல்புரிவதற்கு ஏற்ற மிகச் சிறந்த கருத்து என்பதை நமது அன்றாட வாழ்க்கை அனுபவத்தின் மூலம் நாம் உணரலாம்.' என்கிறார் சுவாமி விவேகானந்தர். அமைதி நம்மிடம் மிகும்தோறும் நமக்கு நன்மை பெருகுகின்றது. நம்மால் அதிகம் செயல்புரிய முடிகின்றது.


ஆன்மீகம் என்பது துறவையும், தவத்தையும் பற்றிய விடயம் என்ற தவறான கருத்தை நீக்கி நாம், நம் வாழ்வை ஆன்மீக வாழ்வாக மாற்றிக்கொள்ள வேண்டும். 'யாரையும் இடுக்கியால் பிடித்து அப்படியே ஆன்மீகத்தினுள் நுழைத்து விட முடியாது. படிப்படியாக மெல்ல மெல்லத்தான் போக வேண்டும்' என்று சுவாமி விவேகானந்தரின் கூற்றிற்கிணங்க நாம் நம் வாழ்வை ஆன்மீக வாழ்வாக மாற்றிக் கொள்வோமாக!

லக்ஸ்மன்

மருத்துவ பீடம்,

கொழும்பு.

# பிள்ளையார்



"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

- திருமூலர் -

திருமூலர் தனது திருமந்திரத்தின் ஆரம்பத்தில் விநாயகரை வழிபட்டு, பிறகே மற்ற பாடல்களை தொடங்கியுள்ளார்.

''பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்
இவை நான்கும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ் செய் துங்கக் கரிமுகத்து தூமணியே
நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா..."

ஔவையார் நான்கு பொருட்களை கொடுத்து மூன்று தமிழையும் பெற்று ''விநாயகர் அகவல்" என்ற அற்புதமான ஞானநூலை வடித்து தந்திருக்கிறார்.

விக்கினேஸ்வரருடைய அனுக்கிரகம் இருந்தால், எல்லாக் காரியங்களும் நன்றாக நடந்துவிடும். எப்படிப்பட்ட தடைகள் தோன்றினாலும், அவைகளை நீக்கி அருள் செய்பவர், வேழ முகத்துடன் கூடிய குழந்தை தெய்வமான பிள்ளையார்தான்.

சிறுவர்கள், படித்துக்கொண்டிருப்பவர்கள், வேலை தேடுபவர்கள் கும்பல் பிள்ளையார் கோவிலில் தான் அதிகம் இருக்கும். தலையில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டால் பிள்ளையார் மகிழ்ந்து விடுவார். இந்த தோப்புக்கரணம் போடுவதை முதன் முதலில் செய்துகாட்டியது மகாவிஷ்ணுதான். ஒரு சமயம் பிள்ளையாரை பார்க்க வந்த விஷ்ணு, தனது சக்கரத்தை சுற்றிக்காட்டி பிள்ளையாரை வேடிக்கை பார்க்க வைத்தார். ஆனால் பிள்ளையார் தனது துதிக்கையை நீட்டி சக்கரத்தை பிடுங்கி தனது வாய்க்குள் வைத்துக்கொண்டார். விஷ்ணு நயமாகவும் பலவித உத்திகளையும் கையாண்டு பார்த்தும் அவரால் அதனை மீளப்பெற முடியவில்லை. இறுதியாக தனது நான்கு கைகளாலும் எதிர்

எதிராக காதுகளை பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட ஆரம்பித்தார். அதை பார்த்த பிள்ளையார் வாயை திறந்து பலமாக சிரிக்கவே, சக்கரம் கீழே விழுந்தது. உடனே விஷ்ணு அதனை எடுத்து வைத்துக் கொண்டார். இந்த சம்பவத்திற்கு பின்பே பிள்ளையாரை மகிழ்விக்க தோப்புக்கரணம் போடுவது ஒரு சுலபமான வழியாயிற்று.

எந்தப் பூஜையானாலும் முதலில் பிள்ளையாரை வழிபட்டு, பிறகே மற்றைய பூஜைகளை தொடங்குவது வழக்கத்தில் உள்ளது. எல்லா தெய்வங்களுக்கும் பிள்ளையார் ஒவ்வொரு காலகட்டத்தில் உபகாரம் பண்ணவேண்டி இருந்தது. திரிபுர சம்ஹரத்திற்கு சிவபெருமான் சென்றபோது வழியில் அவரது இரதத்தின் அச்சு முறிந்து விட்டது. இதனால் அவரால் மேற்கொண்டு செல்ல இயலாமல் போகவே பின்பு விநாயகர் கருணையால் இரதம் சரியாகி அசுரனை வென்று திரிபுராந்தகர் என்ற பெயரை பெற்றார். இந்த நிகழ்ச்சி இந்தியாவில் அச்சிறுபாக்கம் என்ற ஊரில் நிகழ்நததாக சொல்லப்படுகின்றது. இன்று அங்கு ஹேரம்பர் என்ற நாமத்துடன் பிள்ளையார் கம்பீரமாக வீற்றிருக்கின்றார்.

அம்பாள் லலிதாம்பிகை பண்டாஸுரனோடு யுத்தம் செய்வதற்காக, தேவலோக பெண்களை கொண்ட சக்திசேனை என்ற படையுடன் புறப்பட்டு அக்கினி கோட்டை என்ற படை வீட்டில் தங்கி இருந்தாள். பண்டாஸுரனுடன் இருந்த விசுக்ரன் என்ற அசுரன் மந்திர பலம் நிறையப் பெற்றவன். அவன் தனது மந்திர சக்தியால், விக்கின யந்திரம் என்ற ஒரு யந்திரத்தை தயார்செய்து அக்கினி கோட்டையின் உள்ளே வீசினான். இந்த யந்திரம் எதிராளிகளின் மனதை மாற்றிவிடும் தன்மை கொண்டது. இது கோட்டைக்குள் விழுந்தவுடன் சக்தி சேனையின் புத்தி மாறிவிட்டது. ''நாம் எதற்காக அம்பாளுக்கு சேவை செய்ய வேண்டும்? நமக்கும் அசுரர்களுக்கும் எந்த விரோதமும் இல்லை. அம்பாளுக்கு எல்லாவித சக்தியும் இருக்கிறது. அவளே போர் செய்து கொள்ளட்டும்.'' என்றபடி போரில் கலந்து கொள்ள முன்வராமல் அமைதியாக இருந்து விட்டார்கள். அப்போது அம்பாளின் பிரபாவத்தால் உருவான பிள்ளையார், அக்கினி கோட்டையில் இருந்த யந்திரத்தை கண்டுபிடித்து, தனது தந்தத்தால் அதனை குத்தி பொடியாக்கி விட்டார். யந்திரம் வீணாகிப்போனதும், சக்தி சேனையின் மனம் பழையபடி மாறி யுத்தத்திற்கு ஆயத்தமாகி

பண்டாஸுரனை தோற்றுப்போக வைத்தன. இந்த நிகழ்ச்சி ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்லோகத்தில் இடம் பெற்றுள்ளது.

ராம அவதாரத்தில், இராவண சமஹாரத்திற்கு முன்பு பிள்ளையாரை பூஜை செய்ததாகவும் அந்த இடம் தேவிபட்டினம் அருகே உள்ள 'உப்பூர்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கிருஷ்ணாவதாரத்தில் சியமந்தகமணி சம்மந்தமாக கிருஷ்ணன் கஷ்டப்பட்ட சமயம் பிள்ளையாரால் நிவர்த்தி கண்டதாக உள்ளது.

விநாயகர் 32 உருவ தோற்றங்களாக பக்தர்களை ஆட்கொள்கிறார். அவையாவன:
பாலகணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விகன கணபதி, க்ஷிப்ரகணபதி, ஹேரம்ப கணபதி, லட்சுமி கணபதி, மகா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, ஏகாசுர கணபதி, வர கணபதி, திரயாசுர கணபதி, ஷிப்ரபிரசாத கணபதி, ஹரிதராகணபதி, ஏகதந்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ருணமோசன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, திரிமுக கணபதி, சிங்கமுகக கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, சங்கடகர கணபதி என்பவை ஆகும்.

பிள்ளையார் உருவ தோற்றம் பிரணவ எழுத்தினை போன்று அமைந்துள்ளதால், ஞானம் வேண்டிய சித்தர்கள் விநாயகரின் திருவடியை வேண்டி ஞானம் பெற்றனர். அவருடைய பெரிய வயிற்றில் இந்த அண்டம் முழுவதும் அடக்கம். தன்னுள் எல்லாம் அடங்கும் தத்துவத்தை இந்த பெரியவயிறு காண்பிக்கின்றது. பிள்ளையாருக்கு தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உள்ளன. ஒரு கரத்தில் பாசம் உள்ளது. இது பிறவிக்கு காரணமான ஆசையை குறிப்பது. இதுவே பிறவிக்கும் காரணமாக அமைவதால், பாசம் உள்ள கரம் படைப்பு தொழிலை குறிக்கின்றது. மற்றொரு கரத்தில் உள்ள அங்குசம் என்னும் கருவி அழிவிற்கு பயன்படுவது. எனவே இது கடவுளின் அழிக்கும் தொழிலை குறிக்கின்றது. மற்றொன்று அபயகரமாக விளங்குகின்றது. தன்னை நாடி வரும் பக்தர்களை காப்பாற்றும் தன்மையால் இது இறைவனின் காக்கும் தன்மையை குறிக்கின்றது. மோதகம் ஏந்திய வரதமுத்திரையுடன் உள்ள கரம் கீழ் நோக்கி அமைந்துள்ளது. இது ஞான மார்க்கத்தை

குறிப்பிடுவதாகும். தன்னை தஞ்சம் என்று வரும் அடியாருக்கு முக்திபேறு அளிக்கக்கூடிய தன்மையை குறிப்பிடுகின்றது.

ஐந்தாவது கரமான தும்பிக்கை தனிச்சிறப்பு கொண்டது. மற்றைய மனித, விலங்கு, உயிரினங்களுக்கு உள்ள சுவாசிக்கும் உறுப்பாகிய மூக்கு, யானை உருவில் அமைந்த பிள்ளையாருக்கு தும்பிக்கையாக அமைந்துள்ளது. இது நிலம் வரைக்கும் நீளமுள்ளது. உட்புறத்தில் எப்போதும் காற்று இழைந்து கொண்டிருக்கும். யோகியர்கள் தங்களுடைய மூச்சடைக்கும் பயிற்சிக்கும் ஞான உறுப்பாக தும்பிக்கையை கருத்தில் கொண்டனர். பிள்ளையாரின் அடிவயிறு, மார்பு, கழுத்து, நெற்றி, தலைஉச்சி இவற்றில் பாம்பு படம் எடுத்தபடி அமைந்திருக்கும். இது குண்டலினி யோக முறையில் குண்டலினி இயங்கும் விதத்தை குறிப்பிடுவதாகும். பெரிய இரண்டு காதுகள் பக்தர்களை அவர்களது வினைப்பயனாகிய வெப்பத்தி லிருந்து காப்பாற்ற அருள் வீசும விசிறிகளை குறிக்கின்றன.

விநாயகர் வழிபாடு ஆறாம் நூற்றாண்டு முதற்கொண்டு இருந்து வந்தாக சொல்லப்படுகின்றது. அந்த நாட்களில் இந்தியா தவிர மற்றைய நாடுகளிலும் இவ்வழிபாடு பரவி இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விநாயக தத்துவத்தையும், வழிபாட்டின் பயன்களையும் நன்குணர்ந்த பௌத்தர்கள் மற்றைய நாடுகளில் இது பரவ முயன்று வெற்றிகண்டனர். அசோக சக்கரவர்த்தியின் மகள் சாருமதி, நேபாளத்தில் விநாயகர் கோயில் கட்டி வைத்ததாக சான்றுகள் உள்ளன. நேபாளம் மட்டுமன்றி, திபெத், அன்றைய மொங்கோலியா, இலங்கை, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, ஜாவா, பாலித்தீவு, சீனா, ஜப்பான், முதலிய நாடுகளுக்கும் இந்த விநாயகர் வழிபாடு பரவி இருந்தது.

விநாயகரது பெண் வடிவம் 'கணேசினி' என்ற பெயரில் இந்தியாவின் சுசீந்திரம் கோவிலில் அம்பாள் சன்னதிற்கு எதிரில் உள்ள தூணில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற மற்றொன்று ஜபல்பூர் அருகில் உள்ள பேரிகாட் என்ற இடத்திலும் காணக்கிடைக் கின்றது. புலியின் கால்களுடன் '' வியாக்ரபாத கணேசினி'' உருவம், மதுரை சாந்தரேஸ்வரர் கோவிலில் அமைந்துள்ள கம்பத்தடி

மண்டபத்தில் காணலாம். இவை மிகவும் அரிதான காணக் கிடைக்காத சிற்பங்கள்.

சிறு குழந்தையாக நவநீத கிருஷ்ணன் போன்ற அமைப்பில் விநாயகரை, வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவிலில் உள்ள கல்யாண மண்டபத்தில் தரிசனம் செய்யலாம். விநாயகரின் அழகிய நடன தோற்றம் மைசூர் அருகில் உள்ள "ஹளிபேடு" என்ற ஊரின் ஹொய்ஸலேஸ்வரர் கோயிலில் அமைந்துள்ளது. அழகான சிறிய வடிவில் கடல் நுரையினால் உண்டானதும், தும்பிக்கை எதிர்ப்புறம் திரும்பி அமைந்த நிலையிலும் உள்ள விநாயகரை சுவாமிமலை திருவலஞ்சுழி கேத்திரத்தில் தரிசிக்கலாம். ஆந்திராவில் உள்ள ஸ்ரீ சைலத்தில் கண்ணன் குழலூதுவது போன்ற அமைப்பில், விநாயகர் புல்லாங்குழல் இசைத்துக்கொண்டிருப்பது போன்ற நிலையில் வழிபடலாம்.

பிள்ளையார் அருளினால் கிடைக்கக்கூடிய நன்மைகளை ஔவையார் தனது அகவலில் மிக அழகாக சுட்டிக்காட்டியுள்ளார். தாயாக வந்து இரட்சிக்கிறார். மாயையான பிறவிக்கட்டில் இருந்து விடுவிக்கிறார். குருவாக வந்து ஆட்கொள்கின்றார். இப்பூவுலகில் துன்பம் இல்லாத வாழ்க்கைக்கு அனுக்கிரகம் செய்கின்றார். நல்ல உபதேசங்களை அறியச்செய்து, ஞான மார்க்க ஈடுபாட்டுக்கு வழி அமைத்து தருகின்றார். யோகமார்க்கத்தில் ஈடுபட்டு குண்டலினியை பற்றிய அறிவும், அனுபவமும் உண்டாக்கித் தருகின்றார். கடந்த பிறவியின் பாவங்களை போக்கி, இந்த பிறவியின் தன்மையை உணர்த்தி, ஆனந்தமான வாழ்வினை தந்து, முக்தி பேற்றையும் வழங்குகின்றார்.

பிள்ளையார் வழிபாட்டிற்காக ஊர் ஊராக போகவேண்டிய தில்லை. எல்லாக் கோயில்களிலும் அவரை தரிசிக்கலாம். பெருமாள் கோயில்களிலும் தும்பிக்கை ஆழ்வார் என்ற திருநாமத்துடன் காட்சி தருகின்றார். கோயிலுக்கு போகமுடியாத சமயங்களில் ஆற்றங்கரை, அரசமரத்தடி, முட்டுத்தெரு என்று எல்லா இடங்களிலும் வியாபித்துக் கொண்டிருப்பவர். அவருடைய வழிபாட்டிற்கு எளிதான அருகம்புல், எங்கும் கிடைக்கும் எருக்கம்பூ போன்றவையே போதுமானது. வழிபடுவதற்கு எளிதாக அமைந்துள்ளவர். வெகு சீக்கிரத்தில் திருபதி அடைந்து வேண்டுதலை நிறைவேற்றுபவர். இவருடைய

திருப்திக்காக காவடி எடுக்க வேண்டாம். மொட்டை அடிக்க வேண்டாம. அங்கப்பிரதட்சணம் செய்ய வேண்டாம். சுலபமாக தலையில் குட்டிக்கொண்ட தோப்புக்கரணம் போட்டாலே போதுமானது. தினசரி அவரது நாமங்களை மனதால் ஜபித்து, அவரை தியானம் செய்து வர நமக்கு ஜனன வசியம் உண்டாகும். எந்த செயலிலும் விக்கினம் ஏற்படாது. வியாதி பீடை உண்டாகாது. பாபங்கள் நீங்கப்பெறும். மறுமையில் முக்தியும் கிடைக்கும். பிள்ளையாரை வழிபடுவதால் இக வாழ்க்கைக்கு அவசியமான கல்வியும், செல்வமும் கூட நமக்கு கூடி வரும்.

''வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார், திருமேனி
தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு''

என்ற ஔவையாரின் பாடலால் இந்த கருத்து உணரப்படுகின்றது.

''கணபதி என்றிட கலங்கும் வல்வினை
கணபதி என்றிட காலனும் கைதொழும்
கணபதி என்றிட கருமமும் ஆதலால்
கணபதி என்றிட கவலை தீருமே!''

என்றபடி இம்மையில் செம்மையும் மறுமையில் முக்தியும் வேண்டி கீழ்வரும் பன்னிரு நாமங்களை தினசரி காலையில் ஓதி பிறவியின் பயனை எய்துவோமாக.


''ஓம் நமோ கணபதியே''

''கணபதி; விக்னராஜ; லம்பதுண்ட;
கஜானன; த்வைமாதுர; ஹேரம்ப;
ஏகதந்த; கணாதிப; விநாயக;
சாருகர்ண; பசுபால; பவாத்மஜ;

''ஓம் தத்ஸது''

ந. நிஷாந்தன்
விஞ்ஞான பீடம்
2006-2007
முதலாம் வருடம்

*மேற்பிரிவு கட்டுரைப் போட்டியில்*
*முதலிடம் பெற்ற கட்டுரை*



# தமிழ் இலக்கிய நயம்

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்று திருவள்ளுவர் தனது முதலாவது குறளிலேயே கூறியுள்ளார். அ் என்ற எழுத்து எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாக விளங்குவது போல எல்லா மொழிகளிலும் பார்க்கத் தமிழ்மொழி எம் தமிழரிடையே சிறப்புற்று உயர்ந்து விளங்குகின்றது. இத்தகைய தமிழின் வளர்ச்சிக்குத் துணை நின்றவை பற்பல வகைகளைச் சார்ந்தவை. அவற்றினுள்ளே இலக்கியம் பெரும்பங்கு ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய நயம் என்பதை நாம் பொதுவாக ஈண்டு நோக்குவோமாயின், அச்சுவை இலக்கியத்தை அழகுபட, தெளிவுற, ஆற்றலைத்தூண்டும் வகையில், சிந்தனைமிக்க ஓர் நயமாகும். இத்தமிழ் இலக்கியம் இன்றைய நாகரீகம் வாய்ந்த கலாச்சாரம் நிறைந்த இந்நூற்றாண்டிலே அருகிக்கொண்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

எனினும், தமிழ் இலக்கிய நயம் சங்ககாலந்தொட்டு தற்காலம் வரை இலக்கியங்கள் எழுந்தமையால நயந்து புகழ்பெற்று விளங்கியது. சங்ககாலத்திலே எக்காலத்திலும் தோன்றாத ஐந்நூறு7க்கும் மேற்பட்ட புலவர்கள் தோன்றி இலக்கியங்களைப் படைத்தமை தமிழ் இலக்கிய நயம் ஆரம்பித்தமைக்கு ஓர் சான்றாக அமைகிறது. சங்காலத்தை இயற்கை நெறிக்காலம் என அழைக்கின்றனர். இதற்குக் காரணமாக அமைவது யாதெனில், புலவர்கள் இலக்கியங்களை நயம்பட யாத்தமையே ஆகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களைப் புலவர்கள பாவினங்களைக் கையாண்டும் இன்னபொருளை இன்னவாறு அமைத்தல் வேண்டும் எனும் மரபு பிறழாமல் அமைத்தும் உள்ளுரை உவமங்களைப் பாவித்தும் தமிழ் இலக்கிய நயம் திறம்பட அமையத் துணை புரிந்துள்ளனர் என்பதை நாம் இங்கு அறியக்கூடியதாய் உள்ளது. காதல், வீரம் முதலிய அகம், புறம் ஆகிய இரு வகையிலும் இலக்கியங்களை நயந்துள்ளனர். இதற்கு உதாரணமாகப் பின்வரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம்.

"யாவும் ஞாயும் யாராகியரோ
எந்தையும நுந்தையும் எம்முறை கேளீர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயர்னீர் போல
அன்புடை நெஞ்சந் தான் கலந்தனவே"

இங்கு காதல் சுவை கூறப்படுகிறது. அதனிலும் உவமையணியினை கையாண்டு இலக்கியத்தை நயக்கும் விதம் சிறப்பானது. அடுத்து, கம்ப இராமாயாணத்தை நோக்குவோமாயின், கம்பர் எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் தாம் கவிச்சக்கரவர்த்தி என்பதை யாவரும் நினைவிற் கொள்ளும பொருட்டுத் தமது இலக்கிய நயத்தை வெளிப்படுத்தியுள்ளார். உயர்வுச்சிறப்பு, இழிவுச்சிறப்பு, உவமை, உருவகம், அங்கதச் சுவை போன்ற பல சுவைகளைக் கையாண்டு தமது இலக்கியத்தை நயக்கின்றார். உதாரணமாக "சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊனை வெங்கண் நாயின் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாளே" என்று கூறுமிடத்துத் தனது கோபத்தை வெளிக்காட்ட இழிவுச்சிறப்பினை உபயோகித்து கூறுகையில், எந்தளவு இலக்கிய நயம் அதனூடாக வெளிப்படுகின்றது என்பதை எம்மால் அறிய முடியும்.

"கானகத்து காரிருளில் காதலியைக் கைவிட்ட" என்று தொடங்கும் பாடல் நளவெண்பாவுக்குரியது. இதனை இயற்றிய புகழேந்தியாரும் ஓர் சிறப்பான கவிஞராவார். தாம் படைத்த இலக்கியம் சுவை, இரசனை, சிந்தனை மிக்கதாக அமைய மேற்கூறிய பாடலடிகள் போன்றப் பல வரிகளில் நயந்துள்ளார். மற்றும் இதுபோன்ற புலவர்கள், கவிஞர்கள் பாரதத்தில் மட்டுமன்றி ஈழத்திருநாட்டிலும் தோன்றி இலக்கியங்களைச் சிறப்பான முறையில் நயத்தல் பாராட்டுதற்குரிய விடயமாகும். தென்னிந்தியவிலே வடமொழி இலக்கியங்களைப் பார்க்கவும் தமிழ் இலக்கியங்களையே பெரும்பாலான புலவர்கள் பாடியுள்ளனர். இவற்றுக்காக வெண்பா, பலிப்பா, விருத்தப்பா, வஞ்சிப்பா முதலிய நால்வகைப் பாவினங்களைப் பயன்படுத்தியது மட்டுமன்றி அவற்றுக்கு இனமான துறை, தாழிசை, விருத்தம் போன்ற பாவகைகளையும் கையாண்டு இலக்கியங்களை நயந்துள்ளனர்.

அடுத்து நாம் கவிதைகளை யாத்த கவிஞர்களை நோக்குமிடத்து அவர்களும் தமது கவிவரிகளிலே இலக்கிய

வகைகளை உபயோகித்தும் அவற்றின் பொதுக் கருத்துக்களைத் தமது கவிதைகளிலே அமைத்தும் இலக்கியங்களை நயக்கும் விதம் பொருத்தமானதாகும். தொல்காப்பியத்திலே தொல்காப்பியர் 'அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்கும்' உவமை அணியின் மூலம் தமது இலக்கிய நயத்தை வெளிப்படுத்தி காட்டுகின்றார்.

பல்லவர் காலத்தை தென்னிந்திய வரலாற்றிலே பக்தி இலக்கியங்கள் பெருமளவினதாக எழுந்தமையால் பக்தி இலக்கிய காலம் என அழைக்கின்றார். ஆனால் தமிழ் இலக்கியம் எக்காலத்திலும் நயக்கப்பட்டு வருவதாலேயே அதற்கென ஓர் காலவரையறையை அறிஞர்கள் எமக்கு அளிக்கவில்லை என்றே கூறலாம். ஆனால், இருபத்தோராம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இப்பரந்த உலகமும் சிறிய கிராமமாகச் சுருங்கிக் கொண்டு வருகின்றது. நாகரிகம், கலாச்சாரம், தொடர்பாடல் போன்ற பல விடயங்களில் இவ்வுலகம் வளர்ச்சி கண்டு வருகின்றது. இதன் காரணமாகத் தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் யாக்கப்படுவதில்லை என்றே கூறவேண்டும். இதன் காரணமாக தமிழ் இலக்கியங்கள் நயக்கும் தன்மையும் அறிஞர்களிடையே சோர்வுற்றுக் காணப்பட்டு வருகின்றது.

முன்னைய காலத்தில் தமிழலக்கியத்தைப் பாடாத கவிஞனே இல்லை என்ற நிலை தற்போது மாறிக் காணப்படுகிறது. சிறந்த தமிழின் இலக்கியத்தை நயக்கும் தன்மை யாவரிடமும் ஊன்றிக் காணப்படவேண்டும். "வாபழ்க நிரந்தரம் வாழ்க தமிழமொழி" என்ற பாரதியாரின் கூற்றுக்களுக்கிணங்க நாம் அனைவரும் தமிழை மட்டுமன்றி தமிழ் இலக்கிய நயமும் வளர்ச்சிபெறத் துணைபுரிவோம்.

செல்வி பிரமிளா
கொ/ விவேகானந்தா கல்லூரி

# திருக்குறளில் அன்பு



அன்பு என்று அந்த மூன்று எழுத்தில் உலகமும் அதன் உயிர்களும் அடங்கிவிடுகின்றன. அன்பில்லாவிடில் உலகில்லை; உயிரில்லை. ஒரு உயிர் இவ்வுலகில் அவதரித்த விநாடியிலிருந்து உயிர் பிரிந்து வெற்றுடலாகும் வரை அதனை ஆளுவது அன்பு. ஜனித்ததும் தாயின் அன்பு, கண் மலர்கையில் தந்தையின் அன்பு, வளர்கையில் சுற்றத்தார் உறவினர் அன்பு, கற்கையில் சிநேகிதரின் அன்பு, மணம் முடிக்கையில் மனைவியின் அன்பு, மழலைகளின் அன்பு என அன்பு தான் வாழ்வின் அடிப்படை ஆதாரம். வாழ்வெனும் வண்டியின், அச்சாணி போன்றது அன்பு. பாசம், காதல், நட்பு யாவும் அன்பே.

இவ்வாறு உலகமே போற்றும் அன்பை வள்ளுவர் போற்றாமல் இருந்திருப்பாரா? திருவள்ளுவர் விளம்பிய திருக்குறளில் அன்பிற கென்று அன்புடைமை என்ற அதிகாரத்தையே ஒதுக்கியிருக்கிறார். அவர் கையாளும் ஒப்பீடுகள் அன்பில்லாத வாழ்க்கை நீரில்லாத பாலைவனம் என்பதை தெட்டத்தெளிவாக விளக்குகின்றன. அன்பு பற்றிய அவர் கருத்துகள் ஒவ்வொன்றும் விலைமதிக்க முடியாத ரத்தினங்கள். அவற்றின் பெறுமதியை அறிந்தாலே முழுமைப்பயன் அடையலாம்.

அன்பு பெருவெள்ளம் போன்றது. தூய்மையான உள்ளத்தில் இருந்து ஊற்றாகப் பெருகும் அன்பை அடைத்து வைக்கும் தடை உலகில் எதுவும் இல்லை என்பதை வள்ளுவர்,

> அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்' (குறள் 71)

என்று அழகாக கூறியுள்ளார். ஒருவர் பால் நாம் கொண்டுள்ள அன்பை அவர் பொருட்டு எம் கண்ணின் ஓரத்தில் உருவாகும் சிறு கண்ணீர்த்துளியே ஊரறிய பறைசாற்றிவிடும். எம் அன்புக்குரியவருக்கு துன்பம் வரும்போது அவர் கண்கலங்குமுன் நம் கண்கள் குளமாகிவிடும். அதுவே தூய அன்பின் அடையாளம்.

பகவத்கீதை இந்த உலகத்தில் எமக்கு உரியது ஒன்றுமில்லை என்று தெளிவாக கூறுகிறது. நாம் பிறக்கும் போது எதுவும் கொண்டு வருவதில்லை அதே போல் நாம் இறக்கும்போது எதையும் எடுத்துச் செல்லப்போவதில்லை. இரு அந்தங்களுக்கிடையிலான குறுகிய வாழ்க்கையில் எல்லோர்க்கும் உதவி செய்து அன்பு செலுத்தி வாழ வேண்டுமென்பதை,

''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'' (குறள் 72)

என்ற குறளில் வள்ளுவர் உணர்த்தியுள்ளார். அன்பு இல்லாதவர் உலகில் எல்லா பொருளையும் தமக்கே உரிமையாக கொண்டு வாழ்வார். அன்புள்ளம் கொண்டவர்களோ தம் உடலைக்கூட மற்றவர்களுக்கு அர்ப்பணித்து உரிமையாக்கி வாழ்வர் என்பதே இதன் கருத்தாகும். நம் மீது அன்பு கொண்டவர்க்கு செய்யும் சிறு உதவி கூட மட்டற்ற மகிழ்ச்சி தரும்.

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை'' (குறள் 76)

என்கிறார் வள்ளுவர். அறம் செய்வதற்கு மட்டுமே அன்ப துணையாகும் என அறியாதவர் கூறுவர. ஆனால் வீரத்திற்கும் அன்பே துணை. அன்பிற்காக வீறு கொண்டெழுந்த வேங்கைகள் இல்லாத சரித்திரமா? இலக்கியமா? ஐந்தறிவுடைய மிருகம் கூட தம் அன்புக்குரியவருக்கு ஆபத்து எனும் போது வீரம் கொண்டு பாய்வதை நாம் காணவில்லையா? எனவே அன்பானது அறத்திற்கு மட்டுமல்ல மறத்திற்கும் துணையானது.

''என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பு லதனை அறம்'' (குறள் 77)

என்ற குறளில் அன்பு இல்லாதவர் படும் துயரத்தை தெளிவாக விளக்கியுள்ளார். எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் சுட்டு வருத்துவது போல அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும் என்கிறார். அன்பில்லாதவர் வாழ்க்கையில் ஆனந்தம் ஏது? நிம்மதி ஏது? ஆனந்தமும் நிம்மதியும் நாம் அன்பு கொண்டவர்கள் எம்மை சூழ உள்ளபோது வருவது வெறும்

சடப்பொருட்கள் அவ்வுணர்வுகளை எழுப்ப மாட்டாதன வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்துவது அன்பே.

உயிர்வாழ அன்பு அவசியம். அன்பில்லாமல் உயிர் வாழ்வது பயனற்றது என்பதை,

''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

என்ற குறளில் திருவள்ளுவர் கூறியுள்ளார். அன்பின் வழியில் இயங்கும் உடலே உயிருள்ள உடல், அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும். உயிருள்ள மனிதனிற்கும் உயிரற்ற உடலிற்கும் வேறுபாட்டை தருவது அன்பு. அன்பில்லாதவன் இறந்தவனுக்கு சமானமாகின்றான்.

அன்பின் சிறப்பை எல்லா சமயங்களும் போற்றுகின்றன. ''அன்பே சிவம்'' என்கிறது சைவ சமயம். உலகின் பரம்பொருளாகிய சிவனும் அன்பும் ஒன்றே. அன்பில்லாமல் சிவனில்லை. சிவனில்லாமல் அன்பில்லை. இரு கருத்துக்களும் பிரித்தறிய முடியாதவை. ஒன்றிலொன்று கலந்திருப்பவை ஆகவே திருக்குறள்ல் அன்பு பற்றி கூறியிருப்பவற்றை பின்பற்றுங்கள். எல்லோர் மீதும் அன்பு செலுத்துங்கள். உங்கள் வாழ்வு ஆனந்தமாக திகழும்.

செ. இந்துஷி
1ம் வருடம்
மருத்துவ பீடம்

# சிந்தனைத்துளிகள்

| | | |
|---|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | - | தாயும், தந்தையும் |
| வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| போனால் வராதது | - | மானம், உயிர் |
| தானாக வருவது | - | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |
| கடைத்தேற வழி | - | உண்மையும், உழைப்பும் |
| ஒருவன் கெடுவது | - | பொய்சாட்சி, செய்நன்றி மறப்பது |
| வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகப் பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| மிகப் கொடிய தேவை | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பக்கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிகப்பேச்சு |
| செய்யக்கூடாதது | - | தவறுகள் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |

ஆக்கம்
சு.காயத்திரி
4ம் வருடம
முகாமைத்துவநிதிப்பீடம்

# யுத்தத்தின் ரத்தம்

வெண்புறாவைப் பறக்க விட்டு
நாட்டில் சமாதானம் என்ற
பெயரில் சண்டைகளை இட்டு
சிக்கிச் சீரழிந்த சிட்டுக்கள் எத்தனையோ!

சாத்திரம் பல பார்த்துத்தான்
எங்கள் சட்டிகளும் அடுப்பிலேறும்
கோத்திரம் பல பார்த்துத்தான்
பெண்கள் தாலிகளும் கழுத்திலேறும்.

ஜாதி என்னும் பெயரில்
நித்தம் ஒரு சண்டை போட்டு,
காண்கின்றோம் கண்ணெதிரில்,
பூமியில் பல மண்டை ஒடுகள்.

பூச்செடி வளர்க்க ஆசை கொண்டேன்
''விதை'' வை என்றனர்
இப்போது பூச்சூட ஆசை கொண்டேன்
''விதவை'' என்கிறார்கள்!

வானத்து நிலவை வையத்து மனிதன்
தொடச்சென்றுவிட்டான் அவ்விண்ணிற்கே
ஆயினும் சென்றுவிட வில்லை நம்முள்ளத்தில்
ஜாதி, மத, இன வெறிகள்.

ஐயிரு திங்களாய் அங்கம்
எல்லாம் நொந்தவளாய் பெற்ற நம் தாயின்
கனவின் நிலை தான் என்ன?
அழுதிட்ட கண்ணீரின் விலை தான் என்ன?

சுதந்திர நாட்டின் அடிமைகளாய்
பிடிசோறு ஏந்தும் மனிதர்களாய்
வாழ்ந்த காலம் போய்
அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையைப்
போல் ஒரு குடையில் வாழும் நாள்
தான் வெகுவிரைவில் வராதோ!

# நடைமுறை வாழ்வும் நம் இந்துமதமும்...

கல் தோன்றி மண் தோன்றா முற் காலத்தில் தோன்றியது நம் இந்து மதம் இந்த மதம் நடைமுறையை தான் வாழ்வியல் கட்டுப்பாடுகளாக சமய கோட்பாடுகளாக நமக்கு சொல்லி தருகிறது இந்து சமயம் சொல்லும் சம் பிரதாயங்களையும் அது கொண்டுள்ள சாத்வீக உண்மைகளையும் சுருக்கமாகவும் சுவையாகவும் ஆராய்வோம் நெற்றியில் திலகமிடுதல் தொடக்கம் நீத்தார் சம் பிரதாயங்கள் வரை அது ஒவ்வொன்றுக்கும் யதார்த்தம் உண்டு.

எந்த காரியத்தையும் செய்யத் தொடங்க முன், வினை தீர்க்கும் விநாயகரை வழிபடுகிறோம். காரணம் கடவுள் ஆசிர்வாதம் கிட்டும் என்ற நம்பிக்கையை மனதில் ஏற்படுத்திக்கொள்வது இது மறுபுறத்தே ஒரு வாழ்வுக்கு வழி காட்டியாக காணப்படுகிறது எந்த காரியத்தை செய்தாலும் இறைவன் மீது பாரத்தை போட்டுவிட்டு செய்ய அதில் வில்லங்கம் வராது. அப்படி வந்தாலும் வினை ஓடிவிடும் ஒரு காரியம் வெற்றியடைந்து விட்டால், 'நான் அப்படிச் செய்தேன் இப்படி செய்தேன் என வெறி வந்து குதிக்காதே ஏதோ ஆண்டவன் அருளால் இந்த வெற்றி வந்தது' என்று அவனையும் பங்காளியாகச் சேர்த்துக் கொள்

கஷ்டம் வந்துவிட்டது என்றால் 'நான்தான் தவறு செய்துவிட்டேன்' என்று கூட நீ வருந்தத் தேவையில்லை ஏதோ ஆண்டவன் கிருபை இந்த கஷ்டம் இத்தோடு போயிற்று என்று அமைதியடை இலாப நஷ்டம், நன்மை, தீமை எல்லாம் உனக்கு வினைகின்றன என்றாலும் அதற்கு பின்னணியில் இருப்பது ஆண்டவனுடைய இயக்கம்.

உண்மையில் பலரிடம் திறமை இருக்கிறது ஆனால் சிலருக்குத்தான் சந்தர்ப்பம் வாய்கிறது. அந்த சிலரிலேயும் மிகச் சிலர்தான் மிக வேகமாக முன்னேறுகிறார்கள் உலகப்புகழ் பெறுகிறார்கள் ஏன்?

ஆண்டவனுடைய இயக்கத்தில் அவனுடைய ஜாடை யார் மீது எப்பொழுது விழும் என்பதை சொல்ல முடியாது.

எது ஆகும் யாராலே ஆகும் என்றெல்லாம் நாம் பயந்து கொண்டிருக்க தேவையில்லை நம்மாலே ஆகும் என்ற நம்பிக்கைத்தான் முக்கியமாகும். அதற்கு இறை பக்தி அவசியம் அதற்குதான் காரியம் தொடங்க முன் கடவுகளை வழிபட வேண்டும் என இந்து மதம் கூறுகிறது

இந்து மக்கள் பசுவை 'கோமாதா' என கூறுகின்றனர் 'கோமாதா நீ ஊரைக்காக்கிற குல மாதா' என புகழ்வதையும் காண்கிறோம் உண்மைதான் பசுவளம் நாட்டுக்கு மிக அவசியம் வயல் உழுவதற்கு பசு பயன்படுகிறது. மட்டுமன்றி சாணம் வயல்களுக்கு உரமாகிறது மேலும் சாணமானது திரு நீறை செய்ய உதவுகிறது அதனை அறிந்த இந்துமதம் பசுவதை கொடியது என கூறி அன்றே அச்செயலை புறமொதுக்கியது. இன்று வெளிநாடுகளில் விலங்குகள் வதை (Animal Cruality) செய்யப் படுவதை தடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது நம் நாட்டிலும் விவசாய கால்நடை அமைச்சு பசுக்களையும் பால் உற்பத்திகளையும் மேம்படுத்த தற்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றது இந்த சமயம் சமூக வடிக்காற்றின் மூலம் எழுதாத சட்டமாக்கி விட்டதுதானே?

திருநீறு பூசுவதை பற்றி பார்ப்போம் சாணம் எரிக்கப்பட்டே வெண்மை நிற நீறு எடுக்கப்படுகிறது. இது, துன்பங்களும் வல்வினைகளும் நீக்கப்பட்டு வாழ்வு இறுதியில் தூய்மை அடைவதை வலியுறுத்துகிறது மேலும் மூன்று குறியில் திரு நீறு பூசுவதானது 'தெள்ளத் தெளிந்தார்க்கு சிவன் சிவ லிங்கம் என்ற' திரு மூலர் வாக்கை உண்மையாக்குகின்றது.

நெற்றியில் பொட்டு வைத்தல் என்பது பற்றியும் சொல்லியாக வேண்டும் நெற்றியில் தான் உயிர்துடிப்பான நரம்புகள் ஒருமிக்கின்றன எனவே இவ்விடயத்தில் திலகமிடுவதன் மூலம் உயிர் துடிப்பின் ஒரு முக்கியபாகம் சீராக இயக்கப்படுகிறது விஞ்ஞானத்திற்கு கூட நம் மதம் ஆய்வூடகமாக திகழ்ந்துள்ளது தானே!

அடுத்து பொய்யில்லா வாழ்க்கை தொடர்பில் வள்ளுவப் பெருந்தகை கூறும் வாக்கையும் அதற்கு இந்து மதம் சொல்லும் எடுத்து காட்டையும் அறிந்து மகிழ்வோம்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகன் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்"

எந்த பாவங்களை செய்தாலும் கூட நீ கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நியாயம் பொய் சொல்லாமல் இருப்பது.

இலங்கையில் மிக அரிதாகக் காணப்படுவது உண்மை பேசுவது அதிலேயும் ஜனநாயகம் என்ற ஒன்று இலங்கைக்கு வந்த பின் அரசியல் வாதிகள் என்போர் பொய்யே பேசுவது என்று கங்கணம் கட்டி உள்ளனர். அவர்களைப் பார்த்து சாதாரண மக்களும் சராசரி மனிதர்களும் பொய்யே பேசுவது என்று ஆரம்பித்து இருக்கிறார்கள்.

உண்மையே பேசு, உண்மையே பேசு என்று இது (இந்து மதம்) வெறும் வார்த்தையாக சொல்வது கிடையாது. உண்மை பேசியவர் எப்படி வாழ்ந்தான் என்பதற்கு கதைகளையும் சொல்லி இருக்கிறது. ஹரிச்சந்திரனுடைய வரலாறு நாம் அடிக்கடி நினைந்து பார்க்க வேண்டிய வரலாறாகும். உண்மையே பேசுவது என்று வைத்திருந்ததாலேயே ஹரிச்சந்திரன் வாழ்க்கையில் கஷ்டப் பட்டிருக்கலாம். ஆனால் அப்படி ஒரு மன்னன் இந்த பூமியை ஆண்டான் என்பதை இன்று வரை நாம் நினைவில் வைத்துள்ளோம்.

புலனடக்கு புன்னெறி நிக்கி நன்னெறி அடையும் உபாயங்களையும் இந்துசமய சொல்லிதந்துள்ளர்.

“காதி இருவக விளையாடி வீசி வந்தாலும்
தாதி மனம் நிர்க்குடத்தேதான்”

என்னதான் ஆட்டம் போட்டுக் கொண்டு போனாலும் தாதி நீர்க்குடத்திலேதான்ட மனதை வைத்திருப்பாள் தாதி. என்றால் வேலைக்காரி.

ஞானிகளுடைய உள்ளமும் அப்படித்தான் அவர்கள் எதை செய்ய விரும்புகிறார்களோ அதில் லயித்து விடுவார்கள் ஆனால் சராசரி மனிதன் அவஸ்தைப்படுவதெல்லாம் இந்த மனத்தின் போக்கினால் தான்.

மாறுபட்ட உணர்வுகளே மனதின் லயங்கள் மனிதன் தன்னை அறியுட்படி வைப்பதும் மனதுதான் தன்மை அறிய விடாமல் தடுப்பதும் மனதுதான். நாம் என்னதான் உயர்நீதவர்களாக இருந்தாலும் பணிந்து போக வேண்டும், என்ற பணிவை உண்டாக்குவசும் அந்த

மனதுதான். ஆகவே தன்னை அறிய வேண்டிய மனிதன் முதலில் மெல்ல வேண்டிய பெரிய எதிரி மனது.

உடம்பிலே ரத்த கொதிப்பு ஏறுவதற்கு முக்கிய காரணம் மனதின் ''டென்ஷன்தான்'' என்று மருத்துவ நிபுணர்களும், மனோ தத்துவ நிபுணர்களும் கூறுகிறார்கள்.

மனதை நன்றாக அறிந்து கொண்டவன்தான் உலகை வெல்ல முடியும் எதையும் வெல்ல முடியும் என்று உலகம் கருதுகிறது.

திருமுவர் திரு மந்திரத்திலே சொன்னார்.

தன்னை அறிய தனக்கொரு கேடில்லை<br>
தன்னை அறியாமல் தானே கெடுகிறான்<br>
தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்<br>
தன்னையே அர்ச்சிக்க தானிருந்தானே

என்ன! இந்து மதம் உளவியலையும் உலகிற்கு தந்துள்ளதுதானே?

பண்டிகைகள் கொண்டாடுவதை இந்துக்கள் வழமையாகக் கொண்டுள்ளனர் காரணமில்லாமல் இல்லை ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒவ்வொரு காரணம். உண்டு தைப்பொங்கல் சக்தி மூலமாகிய சூரியனுக்கு நன்றி சொல்ல சித்திரை வருடப் பிறப்பு ராசி மாற்றம் பற்றி அறிந்து செயற்பட தீபாவளி தீமைகளின் அரசனாகிய நரகாசுரன் அழிந்த நினைவு என ஒவ்வான்றுக்கும் உள்ளார்ந்த அர்த்த பரிமாணம் உள்ளது.

இது காறும் கூறியன மூலம் இந்து மதம் நடைமுறையுடன் இணைந்தது என்பது வென்னிடை மலைபோல் விளங்கப்படுத்த பட்டுள்ளதன்றோ?

நன்றி

ஆக்கம்<br>
**கிரிஷாந்தன் பொன்னுத்துரை**<br>
**2ம் வருடம்**<br>
**சப்பிரம்**

# பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள்

## கட்டுரைப்போட்டி

### கீழ்பிரிவு

1ம் இடம் : மதுவந்தி வைகுந்த நேசன் :- சாந்த கிளேயர்ஸ் கல்லூரி
2ம் இடம் : சிவபாத சுந்தரம் சிரோஜன் :- கொழும்பு விவேகானந்தா - கல்லூரி
3ம் இடம் : ஜனார்த்தனி ஸ்ரீதரன் :- கொழும்பு விவேகானந்தா - கல்லூரி

### மத்திய பிரிவு

1ம் இடம் : கீர்த்தனா சந்ரஜோதி :- இராமநாதன் இந்து மகளிர் - கல்லூரி
2ம் இடம் : நிருபா பாலசுப்பிரமணியம் :- இராமநாதன் இந்து மகளிர் - கல்லூரி
3ம் இடம் : ஷோபனா யோகநாதன் :- பாமன்கடை ஸ்ரீ ராமகிருஷ்ணா - வித்தியாலயம்

### மேற்பிரிவு

1ம் இடம் : பிரமிளா செல்வராஜா :- கொழும்பு விவேகானந்தா - கல்லூரி
2ம் இடம் : விவேகானந்தலிங்கம் மோகனதர்ஷன்:- கொழும்பு விவேகானந்தா - கல்லூரி
3ம் இடம் : சித்ரகணபதி செந்தூர் :- கொழும்பு புனித அந்தோனியார் - கல்லூரி

## பேச்சுபோட்டி

### கீழ்பிரிவு

1ம் இடம் : மீரா தயாளன் :- திருக்குடும்ப கன்னியர் மடம்
1ம் இடம் : செந்தூரன் சுதந்திரன் :- கொழும்பு விவேகானந்தா - கல்லூரி
2ம் இடம் : வைஷ்ணவி ரவிகுமரன் :- திருக்குடும்ப கன்னியர் மடம்
2ம் இடம் : ரெஷிகா ஸ்ரீதரன் :- கொழும்பு மகளிர் கல்லூரி

### மத்திய பிரிவு

1ம் இடம் : சஞ்சுதா ரவீந்ர குமாரன் :- சாந்த கிளேயர்ஸ் கல்லூரி
2ம் இடம் : மாதங்கி சண்முகேஸ்வரன் :- கொ/இராமநாதன் இந்து மகளிர் - கல்லூரி
3ம் இடம் : விதூஷினி ஸ்ரீகுமாரன் :- நல்லாயன் கன்னியர்மடம்

### மேற்பிரிவு

1ம் இடம் : பிரியதர்ஷினி சோமசுந்தரம் :- கொ/இராமநாதன் இந்து மகளிர் - கல்லூரி
2ம் இடம் : தர்ஷிகா பர்னாந்து :- நல்லாயன் கன்னியர் மடம்
3ம் இடம் : உஷா கௌரி ராஜகோபால் :- சென் மேரிஸ் தமிழ் மகா - வித்தியாலயம்

## தமிழறிவுப் போட்டி

### பிரிவு – 1

1ம் இடம் : கொழும்பு விவேகானந்தா கல்லூரி
செந்தூரன் சுதந்திரன்
கனிவிழி சோதிலிங்கம்
சுந்தரலிங்கம் புவனேசன்

2ம் இடம் : கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
பிரியா லக்ஷ்மி ஜெயகுமார்
கஜலக்ஷ்மி பவலநாதன்
துளசி சர்வேஸ்வரன்

### பிரிவு – 2

1ம் இடம் : கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
பிரமிளா செல்வராஜ்
விவேகாநந்தலிங்கம் மோகனதர்ஷன்
அமலா முத்தையா

2ம் இடம் : நல்லாயன் கன்னியர் மடம்
ஜோதியா எடின் ஜெயஜோதி
தர்ஷிகா பர்னாந்து
விதூஷினி ஸ்ரீ குமாரன்

## கவிதை

### மத்திய பிரிவு

1ம் இடம் : நிரோஷினி கனகலிங்கசிவம் - சாந்த கிளேயர்ஸ் கல்லூரி
2ம் இடம் : திவ்யா ரட்ணம் - நல்லாயன் கன்னியர் மடம்
3ம் இடம் : ஷிவானி நவரட்ணம் - கொழும்பு மகளிர் கல்லூரி

### மேற்பிரிவு

1ம் இடம் : தர்ஷினி ரட்ணம் - கொழும்பு இந்துக் கல்லூரி
2ம் இடம் : ஜெனிடா வாஸ் - நல்லாயன் கன்னியர் மடம்
3ம் இடம் : விஜன்தினி தேவராஜா - முகத்துவாரம் இந்துக்கல்லூரி
4ம் இடம் : விதுஷானி சுரேஷ்குமார் - சாந்த கிளேயர்ஸ் கல்லூரி

# இந்து மன்ற அங்கத்தவர்கள் பெயர் விபரம்

## முகாமைத்துவ நிதிப்பீடம்

1. சி. சிவப்ரியா
2. த. தேனுகா
3. க. விஷ்ணுப்ரியா
4. க. வேணுகோபன்
5. S. பிரதீபன்
6. S. கிருபானந்தன்
7. ப. ஜனனி
8. சூ. மேரியூலியா
9. க. சாந்தகுமார்
10. ச. விக்னேசனா
11. சி. கஸ்தூரி
12. ப. மதியழகன்
13. இ. கலானி
14. ம. பவானி
15. ச. வித்யாசங்கர்
16. R. கோகிலவதனி
17. P. ஷோபனா
18. சி. தாமரைச்செல்வன்
19. S. கவிதா
20. J. கௌரி
21. N.A. சுபராம்
22. S. பிரபாகரன்
23. ம. அருளேந்திரன்
24. ப. ஆழிக்குமார்
25. S. செல்வப்ரியா
26. N. சிவகுமார்
27. S. சாயிமாதவன்
28. மா. வித்யாரூபி
29. ந. நகுந்தன்
30. சுபாஸ்கரன்
31. த. சர்வணா
32. ரதீஷன்
33. ராஜேஷ்குமார்
34. க. பிரசாந்தன்
35. G. கௌரி
36. J. ரகுராம்
37. T. வாலாம்பிகை
38. S. ஸ்ரீகௌரி
39. S. காயத்ரி
40. R. காயத்ரி
41. S. ஸ்ரீநி நிரஞ்சலா
42. ச. ராகேஷ்
43. A. நீரஜா
44. சி. துவாரகா
45. இ. தர்ஷனா
46. A. ஆன்
47. R. ரம்யா
48. T. ராகுலன்
49. இ. ரொபேர்ட்
50. G. அருண் பிரசாத்
51. M. சுகந்தவேணி
52. ல. சிவபிரபா
53. N. சாருகேசி
54. S. சதீஷ்
55. பே. சுதாகரன்
56. ஆ. விஜய் ஆனந்த்
57. A.R. தவமயூரன்
58. செல்வி ப. சதாசிவம்
59. செல்வி T. செல்லையா
60. N. இந்திரஜித்
61. இ. ஹரேந்திரன்
62. கோ. காயத்திரி
63. கோ. சுபோதினி
64. சுதந்தினி
65. சி. நிருஜா
66. த. காயத்திரி
67. தி. நிரந்தரி
68. ந. யாமினி
69. சி. சுரேஷ்குமார்
70. பிரபாளினி
71. கேதீஸ்

## முகாமைத்துவ நிதிப்பீடம்

G. யமுனா
S. சுதர்சினி
G. சசிகலா
M. சேரலிங்கம்
S. சிவரூபன்
T. நந்தன்
சே. செந்தூரன்
R. தீபா
க. அருண்பிரசாத்
ம. திருக்குமரன்
Y. அருணா
P. பிருந்தா
S. உஷாந்தி
தியாகினி
செ. பிரவின் சங்கர்
சி. டினேஷன்
சி. கலைச்செல்வன்
ஸ்ரீ. ரம்யா
க. பாலபிரபா
இ. ஜேனுகா
இ. ராதிகா
சு. காயத்ரி
இ. நிரஞ்சலா தேவி
பா. வசந்தி
T. லிஷாந்தன்
வினோபா
J. ரூபன்
த. றீகன்
இ. டிலானி
ஸ்ரீ. தஷந்தி
மு. கோகிலதர்சினி
இ. சிவராஜா
சதீஸ்
சி. சுஜன்

கு. சஞ்ஜீவன்
B. சுகர்னா
K. ஜினேஸ்குமார்
L. அலெக்ஸ்
N. தாட்சாயினி
T. பிரபு
P. சுகாசினி
S. சிவசெந்தூரன்
S. சிவகுமரன்
V. சர்மானந்
A. சரத்குமார்
S. அஜந்தன்
G. பபிதா
N. சுபாசினி
S. சுகந்தினி
A. பிறின்சி
Y. கவிதா
S. பாரதி
M. பிரியதர்சினி
S. மாதுமை
S. அருளினி
K. கார்த்திகாயினி
P. கார்த்திகா
S. சோனியா
T. சபிதா
P. அர்ச்சனா
D. மேனகா

## விஞ்ஞானபீடம் (10)

1. அ. அசோக்
2. வி. ஸ்ரீசிவதீபன்
3. வி. சிவரஞ்சன்
4. மகிந்தன்
5. கு. சுகுணன்
6. த. பிரதீபன்
7. சு. பிரதீபா
8. கு. கவிதா
9. து. தனுஜா
10. K. விஜயலஷ்மி
11. நீ. நிஷாந்தனன்
12. ந. அகிலன்
13. சி. சிவரூபரஞ்சன்
14. வாகீசன்
15. த. நேசமுருகன்
16. ம. ரஜீவன்
17. க. கார்த்திகா
18. ந. காஞ்சனா
19. த. லக்சிகா
20. சு. தேவப்பிரியன்
21. S. அச்சுதன்
22. D.M. சௌந்தரநாயகம்
23. S. லலித்குமார்
24. S. மயூரன்
25. G. ராகவன்
26. S. சஜீவ்
27. V. சசிகரன்
28. S. தகூரன்
29. V. வரதரூபன்
30. T. விமலராஜா
31. R. அனோஜா
32. S. கிருஷாந்தினி
33. K கவிதா
34. P. மங்கா
35. S. சுதா
36. N. கோகுலன்
37. S. வாசுகி
38. T. சிவரஜி
39. S. ஜெசிகா
40. A. சுபோதினி
41. சு. ரமேஸ்குமார் (12)
42. அ. எழில்ராஜ்
43. சி. சுதர்சனி
44. வி. கிரிபரன்
45. வ. டினுஷா
46. ம. சாரதாஞ்சலி
47. ச. பிரசாந்
48. போல்ராஜ்
49. ல. சர்மிலா
50. திருபரன்
51. தி. தமிழ்வாணன்
52. ச. தர்மேஸ்
53. சியாமளன்
54. சுஜித்தன்
55. த. குமுதினி
56. தக்சாயினி
57. ரா. தர்சினி
58. த. லட்சாயினி
59. சாத்வீகா
60. S. ஸ்ரீகரன்
61. V. கரண்யா
62. டி. கார்த்திக்
63. J. மிதிலா
64. S. யூலியா
65. A. டயானா
66. அனுசுஜா
67. புஸ்பமலர்
68. ரவி
69. சோபனா
70. தாட்ஸா
71. நிருஸ்யா
72. கோமதி

73. அனுவின்
74. கேதீஸ்
75. பிரசாத்
76. உஷாந
77. சிவன்
78. சதீஸ்குமார்
79. மஞ்சு
80. ஆரூரன்
81. அரவிந்தன்
82. ஹனித்தா
83. சாருஷாசன
84. சுகந்தன்
85. கவிதா

## கலைபீடம் (10)

1. R. ருக்ஸான்
2. S. ஜனனி
3. L. சண்ஜீவனி
4. கோசலா
5. சுபாஜினி
6. பிரியதர்சினி
7. துஷாரினி
8. V. கங்கா
9. S. அருட்செல்வி
10. T. சுதாகர்
11. R. பவானி
12. K. நிரஞ்சனி
13. தாட்சாயினி
14. சர்மிலா
15. க. தேவிகா
16. நிரு
17. S. சித்யா
18. S. சுதாமதி
19. கிருஷ்ணா
20. K. கருணாநிதி
21. S. சர்மிலா
22. S. கோமதி
23. கு. வனிதா
24. இ. கேசவன்

## சட்ட பீடம் 05


1. S. யாழினி
2. R. லிங்கதர்சினி
3. M. காயத்ரி
4. S. சுரேஸ்
5. J. தினேஸ்
6. S. மோகனராஜன்
7. துர்க்கா
8. L. பிரேம்
9. மலர்மதி
10. குகராஜா
11. ஆர்த்தி
12. ஆற்புதராஜ்
13. P சுதா
14. சசிரேகா
15. M. லஷ்மிஸ்ரீ
16. S. திருமகள்
17. S. நிருதிகா
18. V. சர்மினி
19. K. ஜங்கரன்
20. R. காயத்ரி
21. T. நிஷாந்தினி
22. S. பிரதீபா
23. L. காயத்ரி
24. கொ. கிருஷாந்தன்
25. சுந்தரவடிவாம்பிகை
26. சுதர்சினி
27. கோசலை
28. அருள்வாணி
29. தர்சினி
30. ஜெயந்தினி
31. கார்த்திகா
32. கஜபிரியா

## மருத்துவ பீடம்

S. சியாந்த்
T. கேசவன்
G. ரஜீவ்
K. மோகனதாஸ்
K. விஜயபாரதி
M. ஷாலினி
L. அனபெலா
T. துளசி
S. மயூரதி
V. வினோதிகா
R. நிஷாந்தன்
R. ஹரேஷ்
M. வாகீஸ்வரன்
T. ரஜீவன்
S. ஜனனி
T. ஷர்மிளா
T. ராகவன்
R. ஜசிதா
K. மஹிலினி
B. மார்த்தனி
S. பிரணவன்
S. அருணன்
M.A. பிரசாத்
R. தனிகைவாசன்
R. கஜந்தன்
P. திலீபன்
T. பிரசாந்
B. பாலகோபி
M. சபேந்திரன்
G.R. நிர்மலசிங்கம்
M. லக்ஷ்மன்
V. துஷ்யந்தன்
V. ஜீவாகன்
M. ஞானரூபன்

# நன்றி உரை

- ☞ எமது கலைவிழாவிற்கு பிரதம விருந்தினராக வருகைதந்த ஏ. ஆர். சுரேந்திரன் அவர்களுக்கும்
- ☞ கௌரவ விருந்தினராய் எமது கலைவிழாவிற்கு வருகை தந்த சு. கனகநாதன் அவர்களுக்கும்
- ☞ இந்து தீபத்தின் சிறப்புப்பிரதிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கும்
- ☞ கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் திலக் ஹெட்டியாராச்சி அவர்களுக்கும் மற்றும் அனைத்து பீடாதிபதிகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கும்
- ☞ இந்து மன்றத்தின் சிரேஷ்ட பொருளாளர் ஸ்ரீ காந்தன் அவர்களுக்கும்
- ☞ பதாதைகள் மற்றும் விளம்பர அனுசரணை வழங்கியோருக்கும், நலன் விரும்பிகளுக்கும்
- ☞ ஊடக அனுசரணை வழங்கிய சக்தி F.M மற்றும் எமது இந்துமன்ற வரலாற்று தொகுப்பினை பிரசுரித்த வீரகேசரி பிரசுரத்தாருக்கும்
- ☞ ஒலி அமைப்பு வழங்கியோருக்கும்
- ☞ இந்து தீபத்தினை வடிவமைத்து தந்த U.K அச்சகத்தினருக்கும்
- ☞ மற்றும் நன்றி கூற மறந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவத்துக் கொள்கிறோம்.



# கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றம்

"அருவினை எப்ப உளவோ கருவியான்
காலமறிந்து செய்யின்"

என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழிக்கேற்ப, ஏற்றகாலத்தில், தகுந்த கருவிகளுடன் செய்யின் அரிய கருமமென்று எதுவுமே இருக்க முடியாது. இவ்வாறே,

பல ஆண்டுகளாக தமிழ் இந்துப் பண்பாடு மிளிரும் மன்றம் ஒன்று தமிழ் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக் கழக வளாகத்தில் இல்லாத குறையை பூர்த்தி செய்வதற்காக மீளவும் கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றமானது 10-11-1993 அன்று ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தமது கற்றல் நிகழ்வோடு மட்டும் நின்றுவிடாது தமது கலை கலாச்சாரத்தை பாதுகாக்க வேண்டும் இந்து மதத்தின் அன்பு நெறியை உலகறியச் செய்ய வேண்டும் என்பதனை குறிக்கோளாக கொண்டு ஆதியும் அந்தமும் அற்ற இந்து மதத்தினை தழுவிக் கொள்ளும் இந்து மாணவர்களை இணைக்கும் பாலமாய் மதங்களைத் தாண்டி, தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் கலைகள் படைக்க களமாயும், அணைத்து நிற்கும் அன்புக்கரமாயும் இந்து மன்றம் திகழ்கிறது.

கொழும்பு பல்கலைகழகத்தின் விஞ்ஞானம், முகாமைத்துவம், மருத்துவம், சட்டம், கலை போன்ற நானாவித பீடங்களிலும் பயிலும் தமிழ் மாணவர்கள் தம் எல்லோருக்கும் பொதுவான பாரம்பரியத்தை, மரபை மறவாது உவகையும் உற்சாத்துடனும் மனவெழுச்சி கொண்டு தமது தனித்துவத்தை இடர்கள், நெருக்கங்களுக்கு மத்தியிலும் பேணிப் போற்றி வருகின்றனர். மாணவர்களின் அயராத ஆக்கமும், ஊக்கமும் தொடர்ச்சியான ஒத்துழைப்பும் பக்க பலமாக அணிசெய்ய மன்றமானது எச்சவாலையும் முறியடித்து வீறு நடை போட்டு வருகின்றது.

இந்து மன்றத்தின் முதலாவது செயற்குழுவானது திரு. கு. விஜயாலயன் தலைமையில் செயற்படத் தொடங்கியது. அதன் பயனாக ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 16ம் நாள் (29-01-1994) அன்று

''ஏகம் சத் விப்ரா பஹுவதந்தி'' என்றும், ''எம்மதமும் சம்மதம்'' என்றும் பறைசாற்றும் இந்துமத அறிவை, அன்று அமெரிக்காவில் எடுத்தியம்பிய அண்ணல் விவேகானந்தரின் சிகாகோ பேருரைக்கு நூற்றாண்டு விழா கொண்டாட விழா எடுத்து ''ஹரிஷஹானம்'' என்னும் சஞ்சிகையையும் வெளியிட்டது. அதனை தொடர்ந்துவரும் ஒவ்வொரு ஆண்டிலும்

''மனதிலுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
.... காரியத்திலுறுதி வேண்டும்
.... உண்மை நின்றிட வேண்டும்'

என்பதற்கிணங்க, பன்மொழி பேசிடினும் தோழமையால் இணைந்து வேற்றுமை பாராட்டாது வாழ்ந்திருக்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இந்து மன்றமானது கலைவிழாவை நடாத்துவதுடன் ''இந்து தீபம்'' என்னும் சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. இந்து தீபத்தில் மாணவர்களின் ஆக்கங்களும் திறமைகளும், கவிதை, கட்டுரை, சிறுகதைகள், தத்துவங்கள், அறிவுரைகள் என பல்வேறு வடிவங்களில் வெளிக் கொண்டுவரப்படுகின்றது.

அது மட்டுமன்றி அனைத்து மதங்களையும் சேர்ந்த பெரியார்களின் ஆசிச் செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றையும் ''இந்து தீபம்'' மலரில் உள்ளடக்கி, மதம் என்பது மனிதனை மனிதநேயமுள்ளவனாக வாழவழி காட்டுவனவாக அமையவேண்டுமே அன்றி, மதம் பிடித்தவனாக மாற்றக்கூடாது,'' என்பதை பறைசாற்றி ஒரு தசாப்தத்தை கடந்துவிட்ட போதிலும் ஆண்டுதோறும் தனது சுடர் ஒளியை பரப்பிக் கொண்டிருக்கிறது.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றமானது ஆலயங்களில் அறப் பணிகளை புரிதல், சமய விழாக்களை அனைத்து பீட மாணவர்களையும் ஒன்றிணைத்து கொண்டாடுதல், வருடம்தோறும் திருத்தலயாத்திரைக்கும் மாணவர்களை கூட்டிச் செல்லுதல், பீடங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள், கவிதைப் போட்டிகள், பட்டி மன்றங்கள் போன்றவற்றையும் நடாத்தி வருகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக மன்றத்தின் முயற்சிகள் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுடன் மட்டும் நின்று விடக்கூடாது என்பதற்காக அகில இலங்கை ரீதியாக பாடசாலை

மாணவர்களுக்கிடையேயும் பேச்சு, கவிதை, கட்டுரை, தமிழறிவு போன்ற போட்டிகளை நடாத்துவதுடன், வெற்றி பெறும் மாணவர் களுக்கு புலமைப்பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது. முதியோர், சிறுவர் இல்லங்களுக்கு தேவையான சில உதவிகளையும் செய்து வருகிறது. இந்து மதம் என்ற வட்டத்துக்குள் தனது பணிகளை குறிக்கிக் கொள்ளாது, ஏனைய மத மாணவர்களையும் முடிந்தவரை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்துள்ளதை இட்டும் பேருவகை அடைகிறது.

"முட்ட முட்ட பஞ்சம் வந்தாலும்
இட்ட சிவனும் கைவிடான்"

என்ற அடிப்படையில் இந்த மன்றம் செயற்பட்டுக் கொண்டிருப்பதன் விளைவாக இம்முறையும், செ. பிரவின் சங்கரை தலைவராக கொண்ட செயற்குழுவின் தலைமையில் இந்து மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற இக்கலைவிழா 2006
அனைவரது உள்ளங்களையும் கவர்ந்ததாக அமையும் என நம்புகிறோம்.

**வரலாற்றுத் தொகுப்பு**
**இராஜகோப்பால் – ஜேனுகா**

# நாட்குறிப்பு

08/06/2005

**ஆண்டுப்பொதுக்கூட்டம்**

இரண்டரை வருடங்களாக தடைப்பட்டிருந்த இந்து மன்றத்தின் செயற்பாடுகளை மீண்டும் தொடரும் முகமாக சில ஆர்வலர்களது அயராத முயற்சியால் ஆண்டுப் பொதுக்கூட்டம் மீண்டும் கூட்டப்பட்டது. இந்நிகழ்வில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

02/10/2005

**பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்திறன் போட்டி**

கொழும்பு மாவட்ட தமிழ் பாடசாலைகளுக்கிடையில் இப்போட்டி இடம்பெற்றது. 14 பாடசாலைகள் கலந்துகொண்டு போட்டியிட்ட இந்நிகழ்வில் கட்டுரை, கவிதை, பேச்சு, சிறுகதை, தமிழறிவு ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

10/10/2005

**வாணி விழா**

நவராத்திரி விரதத்தினை முன்னிட்டு விஜயதசமி தினத்தன்று மாலை புதிய கலை அரங்கில் (NAT) வாணிவிழா நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்து சிறப்பித்தனர்.

08/01/2006

**கவின் கலையமுதம்**

புதிய கதிரேசன் மண்டபத்தில் ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகிய இவ்விழாவில் பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்திறன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

15/01/2006


**தைப்பொங்கல், விளையாட்டுப்போட்டி**

தைப்பொங்கல் திருநாளை கொண்டாடும் முகமாகவும் சகல பீடங்களுக்கிடையிலான நட்புறவினை பலப்படுத்தும் முகமாகவும் நடைபெறும் இந்நிகழ்வானது இம்முறையும் சிறப்பான முறையில் நிகழ்ந்தேறியது. அதிகாலையில் பொங்கல் பொங்கி, ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் பல போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. போட்டிகளில் ஆண்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் விஞ்ஞானபீடமும், பெண்களுக்கிடையிலான கிரிக்கெட், வலைப்பந்தாட்டம், மற்றும் ஆண்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் முகாமைத்துவ நிதிப்பீடமும் வெற்றி பெற்றன.

26/02/2006

**சிவராத்திரி திருத்தல யாத்திரை**

சிவராத்திரி தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக இந்து மன்றத்தினால் வருடாந்தம் ஒழுங்குப்படுத்தப்படும் இத்திருத்தல யாத்திரை இம்முறை கதிர்காமத்தை நோக்கி ஒழுங்கு செய்யப் பட்டது. அனைத்து பீடங்களையும் சார்ந்த ஏறக்குறைய 130 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இரண்டுநாள் தல யாத்திரை இனிதே நிறைவேறியது.




Dreamerrs
we make it happen


internet caf'e • travels & tours • communication • media advertising • designing & printing

362 1/1 Galle Road Wellawatte Sri Lanka

TEL : 0094 (11) 236 36 16 FAX : 0094 (11) 236 36 17

E-mail: dreamerrs_net@yahoo.com


# இதுவரை ஒளிர்ந்து சுடர்வீசிய தீபங்கள்...





95/96





96/97





98/99




93/94




99/00




00/01




01/02

UK PRINTERS Tel: 4614153